
உ

# கொக்குவில் இந்துக் கல்லூரி



புதிய மூன்று மாடிக் கட்டிடம்

# KOKUVIL HINDU COLLEGE

University of Jaffna
373
KOK
249955(AR; Main)

மார்ச் 1977

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

மண்ணில் நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணானே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட் டலறி
உலகெலாந் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப் பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

373
KOK
UNIVERSITY OF JAFFNA LIBRARY

"கற்ற தொழுகு"

பொறுப்பாசிரியர் :

திரு. எம். சிவராசா

சஞ்சிகைக் குழுவினர் :

திருமதி எஸ். சுப்பிரமணியம்

திரு. எஸ். துரைராசா

திரு. எஸ். காசிநாதர்

சஞ்சிகை வெளியீட்டுப் பொறுப்பாளர் :

திரு. கே. மயில்வாகனம்

# உள்ளே....


| | | |
|---|---|---|
| 1 | ஆசிரியர் பேனாமுனை | 1 |
| 2 | Principal's Notes | 3 |
| 3 | எமது கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கம் கண்ட திரு. எம். ஏ. நடராசா | 5 |
| 4 | M. A. Nadarajah | 8 |
| 5 | எங்கள் கிருஷ்ணசாமி | 10 |
| 6 | 30 Year Memories | 12 |
| 7 | திருமதி P. P. பார்கவியம்மா B. A. | 15 |


மாணவர் பகுதி


| | | |
|---|---|---|
| 8 | பாரதி கண்ட சமுதாயம் | 17 |
| 9 | போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து | 18 |
| 10 | உண்மை உள்ளம் | 19 |
| 11 | அன்பு | 20 |
| 12 | உள்நாட்டு விவசாயமும் நிலச் சீர்திருத்தமும் | 21 |
| 13 | இலங்கையின் பொருளாதார அமைப்பு | 24 |
| 14 | உழவுத்தொழிலின் உயர்வு | 26 |
| 15 | நீதியதோ | 28 |
| 16 | பாரம்பரியமற்ற எரிபொருட்கள் | 29 |
| 17 | பலவிதமான கண்கள் | 30 |
| 18 | கல்வியில் ஒரு நோக்கு | 31 |
| 19 | My First day at School | 33 |
| 20 | The Flying Saucer | 34 |
| 21 | Marx's Free thoughts about Society and Education | 34 |
| 22 | Rainy day | 36 |
| 23 | அதிபரின் பரிசளிப்பு விழா அறிக்கை | 37 |
| 24 | பரிசுபெறும் மாணவர்கள் | 43 |
| 25 | பரிசளிப்பு விழாவிற்கு நிதி வழங்கியோர் | 44 |
| 26 | பரீட்சைப் பெறுபேறுகள் 1976 | 46 |


249955
249955
ARCHIVES
University of Jaffna
249955
Library
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி வணக்கம்

தெளிதரு கலேபயில் பலமா ணவர்தேர்
கொக்குவில் ஹிந்துக்கல் லூரி!

கொக்கூர்க்கு ஹிந்துக் கல்லூரிநீ தீபம்!
கிராமத்துக் கொண்மணி மகுடம்.
நினதுயர் கலைமுறை நிதம்நிதம் பெற்றேம்!
நினதருள் யாமினி மறவேம்.
நீயே வித்தையி னுறையுள், நினதே எங்களி னுயர்வு
நினதடி யேத்து வோமே.

பல்லவி

நினதருள் மிகுமொழி நமதே பொருளாம்; நீதரு ஞானம தீதம்;
ஜெயஹோ! ஜெயஹோ! ஜெயஹோ! ஜெய, ஜெய, ஜெய, ஜெயஹோ!
நீதரு ஞானம தீதம்.

அறிவுச் சுடர்கொண் டறம்பொரு ளின்பம்
தழுவும் வாழ்வினைத் தந்தாய்
கற்றன ஒழுகும் சீருறு வழிநீ
காட்டினே. நீடுக எனவே
அற்புத நடமா டமலன் அடிமன னெடுவழி படுவோம்;
வழிமுறை மிளிர்க நின் நாமம்.

பல்லவி

நினதருள் — ஞானம தீதம்

உள்ளத் துறுதி தருவா யுன்றன்
பாரம் பரியம் பேண
பூமியில் நீபெறு நல்லிசை மேலாய்
பெருமிதம் மாணவர்க் கென்றும்
முயல்குவம் நீயுயர் வழிகள் முழுமன னெடுமகிழ் வாக
கொக்குவில் ஹிந்து நமதே.

பல்லவி

நினதருள் — ஞானம தீதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பேனாமுனை

## நினைவாஞ்சலி

" நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று."

இச் சஞ்சிகை இம்முறை கல்லூரியினுடன் தம் வாழ்நாளிற் பெரும் பகுதியைக் களித்த பெரியோர்களினதும் இன்று நம்மிடையே இல்லாதவர்களினதும் வாழ்க்கைக் குறிப்புகளை அடக்கி இவர்கட்கு அஞ்சலி செலுத்தும் முகமாக வெளிவருகிறது. திரு. M. A. நடராசா அவர்கள் கொழும்பு மாநகரில் வதித்து வந்தாலும் எமது கல்லூரி இன்றைய நிலைக்கு வருவதற்கு 1944-ம் ஆண்டு முதலே அரும்பணியாற்றி வந்த பெரியாராவர்.

கொடைவள்ளல் திரு. E. கிருஷ்ணசாமி நம் கல்லூரியின் இன்றைய தோற்றத்திற்கு மெருகூட்டியவர். இவர்தம் இழப்பு எம் கல்லூரிக்கும் ஈழத்திற்கும் ஒரு பேரிழப்பாகும்.

எங்கள் ரீச்சர் திருமதி P. P. பார்கவியம்மா, இவரை இன்றைய மாணவர்கள் அறியாவிடினும் பழைய மாணவ சமுதாயத்தினர் ஒருபோதும் மறக்கவேமாட்டார்கள். இவரிடம் ஆங்கிலம் கற்ற பலர் இன்று பெரிய எழுத்தாளர்களாகவும் திகழ்வதை நான் குறிப்பிடாதிருக்க முடியாது.

ஆசியரியர் திரு. N. கிருஷ்ணசாமி 1-5-54 முதல் 15-2-68 வரை நமது கல்லூரியில் கற்பித்த மற்ருேர் நல்லாசிரியன்.

ஈழத்திலே நடனத்துறையிலே தனக்கென ஓரிடத்தை வகுத்து ஏராளமான நர்த்தகிகளை எமக்கு உருவாக்கித் தந்த நடன ஆசிரியர் திரு. ஏ. சுப்பையா அவர்களை நாம் ஒருபோதும் மறக்கவே முடியாது.

இவர்கள் எல்லோரும் எமது கல்லூரிக்கு ஆற்றிய தொண்டினை நாம் என்றென்றும் நினைவு கூருவோம்.

## சஞ்சிகையின் கடமை

கல்லூரிச் சஞ்சிகையே எம்மைப் பழைய மாணவரோடும், கல்லூரி நலன் விரும்பிகளோடும் அவர்களை எம்முடனும் தொடர்புகொள்ள உதவும் அரும்பெரும் சாதனமாகும். கொக்குவில் இந்துவின் வளர்ச்சியை இன்று கல்லூரியில் பயிலும் மாணவரும், பெற்ருேரும் மட்டும் ஆவலுடன் அவதானித்துக்கொண்டிருக்கவில்லை. ஈழவள நாட்டில் மட்டுமல்லாது உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழும் எம் பழைய மாணவர்கள் எமது கல்லூரியின் வளர்ச்சியை என்றென்றும் அவதானித்த வண்ணமே இருக்கிருர்கள் என்பதை அவர்கள் இன்றுவரை எம்முடன் கொண்டிருக்கும் தொடர்புகள் மூலம் அறியமுடிகிறது. அவர்களுடன் எமது கல்லூரி, தனது பெருமையையும் வளர்ச்சியையும் பற்றியெல்லாம் பேசிக்கொள்வது இச் சஞ்சிகையின் மூலமேதான் என்ருல் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடா வருடம் பங்குனித் திங்களில் கல்லூரியின் சஞ்சிகை வெளிவர வேண்டும் என்ற பேரவாவினுற்ருன் இக்குறுகிய எட்டுமாத காலத்தில் மீண்டும் எமது சஞ்சிகை தங்கள் கைகளில் தவழ்கின்றது. இச் சஞ்சிகையைத் திரு M. A. நடராசா அவர்களின் ஞாபகார்த்த மலராகவும் வெளியிட்டு வைப்பதில் ஊக்கமும் உற்சாகத்தினையும் அளித்த கொழும்புவாழ் பழைய மாணவர் யாவருக்கும் குறிப்பாக திரு. எஸ் இரத்தினப்பிரகாசம் திரு S. S. இரத்தினசபாபதி ஆகியோருக்கு எமது நன்றி என்றென்றும் உரித்தாகுக

## சிந்திப்போமா !

"கற்றது ஒழுகு" என்பது எமது கல்லூரியின் குறிக்கோள். "கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு" கைமண் அளவுதான் நாம் கற்கிருேம். அதன்படி ஒழுகவாவது நமது மாணவர்கள் முற்பட வேண்டுமே என்று கருதியே நம் கல்லூரியின் முன்னேடிகள் "கற்றதொழுகு" என்ற இக்குறிக்கோளைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

கல்வியைக் கற்கிருேம். கடைத்தெரு நாய்போல நம் மனதையும், செயலையும் அலையவிட்டுவிடுகிருேம் தமது செயல்கள் அத்தனையையும் எத்தனையோ சோடிக் கண்கள் பார்த்தவண்ணமே இருக்கின்றன என்பதை மறந்து மறைந்தொழுகும் மாந்தர் பலர் நம்மிடையே உண்டு.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."

விழுப்பம் என்ருல் சிறப்பு என்று பொருள். புகழ், பெருமை, உயர்வு, நலம் எல்லாவற்றையும் தருவது ஒழுக்கம். ஆகவே, ஒழுக்கம் பேணப்பட வேண்டிய தொன்றே உயிரினும் ஓம்பப்பட வேண்டியது ஒழுக்கம் என்று கூறுகிருரே வள்ளுவர் என்ன மடைத்தனம் என்று நாம் எண்ணக்கூடும் உயிர் போய்விடுகிறதாம். அதன்பின் ஒழுக்கத்தைப் பற்றி ஏன் பேச வேண்டும். கிறிஸ்ரியன் பானுட் கண்டுபிடித்த இதய மாற்றீடு முறையாலோ, வேறு விஞ்ஞான முயற்சிகளின் மூலமோ என்ருே ஒருநாள் உயிரை மீண்டும் உடலுடன் பொருத்திவிடுவான் மனிதன் என்றும் ஆனுல், இழந்துபோன மானம் மீட்டுக் கொண்டுவர எந்த விஞ்ஞானியாலும் முடியாது எனறும் அன்றே பொய்யாமொழி உணர்ந்திருந்தார் போலும்.

மனிதனை மனிதனுக்குவதே கல்வி. நேர்மையுடன் ஒழுகல், அன்புடன் பழகல், எளிமையான வாழ்வு வாழ்தல், அடக்கமாயிருத்தல், தளராத உறுதியுடன் உழைத்தல் ஆகியன உள்ளவனே மனிதன். இவைபற்றியெல்லாம் பாடங்களில் ஆங்காங்கே கற்கிருேம். கற்றபடி எத்தனை பேர் ஒழுகுகிருேம்?

★

"தன்னுடைய புத்தகங்களைத் தின்னத் தெரியாத பைத்தியகாரன் மனிதனே! என்று கறையான் நினைக்கிறது."

— தாகூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Principal
## எமது அதிபர்



Mr. M. Mahadevan, B. A. (Cey.), B. A. (Hons.) Lond., Dip. in Ed.

திரு. மா. மகாதேவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



G. C. E. (A/L) இராப்போசன விருந்து 1976.

பிரதம விருந்தினர் திரு. M. V. தியாகராசா அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PRINCIPAL'S NOTES

We are dedicating this number as a memnto to Mr. M. A. Nadarajah, a distinguished Old Boy of our College, who is no more with us. He is one of the 'Veterans' among our alma mater. He retired with honours from Government Service, rising to the highest grade in the Finance Ministry as an accountant. A son of the soil of Kokuvil he always had the interest of his old school at heart. The past Principals of the school found him a tower of strength. He always kept an "open" house at Wellawatte for Committee meetings of the O. S. A. (Colombo Branch). He always treated us sumptuously to delicacies and a "Grand" tea. Though my Association with him was brief yet I was able to realise his sterling qualities of head and heart which have endeared him to all of us. May his soul rest in peace at the feet of Lord Shiva.

I should not fail to mention the untimely demise of Mr. E. Krishnasamy this year. Though not an Old Boy of the College, he is a well wisher of our institution and has donated a princely sum of Rs. 10,000 to our Building Fund. When I, along with the Deputy Principal and some well wishers of the school met him at his house and explained our position, he donated us the sum mentioned above. Further he was a shining example to our students of a person who rose to great heights by scientific farming. His fame as a cultivator of the Grape Vine has spread through the whole Island. May his soul rest in peace at the sacred feet of Lord Shiva.

Kokuvil Hindu College Magazine, as promised in the last year's issue, has made its appearance on the due date. It is a happy augury for the future. Delving into the past, I came across "Kokuvil Mirror", College magazine published by the students in the early ninteen forties. I discovered there, the ardent desire of the Old students of that period to excel in the noble Art of expressing their ideas in black and white. Practice makes one perfect. We are giving our young generation of students the chance to think coherently and lucidly. This will stand them in good stead when they enter into the wider field of life later. The Magazine will also be of great help to our distinguished old students who can follow the growth



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

of their "Alma Mater" in different activities.

We are very happy to announce the happy tidings of the completion of the new storeyed block. The Library which was housed in the ground floor of the same block has been shifted to the second storey. Our Library is now housed in well-ventilated and spacious surroundings. It goes without saying that a well-equipped Library is a great asset to the College and in this respect we have built our Library over the years to such a position that it now occupies a prominent place among the Libraries of educational institutions of similar standing.

The 1976 N.C.G.E. results were released by the first week of February this year. Our students have fared well. One hundred and thirty six students are qualified to follow the HNCE Science course and 20 to follow the Commerce course. The new system of education has certainly made a great advance on the past system. We have introduced, in addition to those already existing, several new Pre-Vocational subjects such as Paper-making, Metal work, and Radio Technology. This caters to the diversified interests of our young students. They show great enthusiasm in studying these courses of study. However we have to note that this year in our college no one has opted to follow either Social Sciences or Humanities or Aesthetic Studies. Most of the Parents want their children to follow Science and Commerce because they give them better chances to seek employment. But however that may be, we require future Citizens who have a balanced view of life and its creative aspects. I hope that this imbalance will correct itself, in the years to come.

The school and the community plays an important role in the growth of an educational institution. We are happy to note that in our case the community (P.T.A. and O.S.A.) is evincing great interest in our progress. Their unstinted help and advice has greatly facilitated me in carrying on the various onerous duties which naturally devolve on a Principal of a college. The completion of the three storeyed block was in a great measure due to the unstinted and splendid efforts made by the PTA and OSA in the collection of funds and in the supervision of the Building. In this respect I should be failing in my duty if I do not mention the timely financial help given by our M. P. and Political Authority, Mr. C. Arulampalam. The sum provided by him to our building amounts to one lakh and forty five thousand rupees.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கம் கண்ட திரு. எம். ஏ. நடராசா

*"கொக்குவில் இந்துவாழ்க குழுவி*
*யாசிரியர் வாழ்க.*
*மக்களும் மனைவியோடும் மகிழ்ந்திடும்*
*கிராமம் வாழ்க.*
*தொக்க மாணவர் கொழும்பில்*
*தோற்றிய சங்கம் வாழ்க."*

என்று பாராட்டிப் பாடப்பெற்றது, எமது கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கம். எமது கல்லூரி முன்னுள் அதிபர், ஆசிரியர் மற்றும் பழைய மாணவர் பலரின் கூட்டுறவோடு இச்சங்கத்தைத் தோற்றுவித்தவர் பெரியார் திரு. எம். ஏ. நடராசா ஆவர். இவர் மறைந்து இரண்டு வருடங்கள் உருண்டோடிவிட்டன. பெரியார் எம். ஏ. நடராசா அவர்களைப் பற்றி எமது கல்லூரிச் சஞ்சிகைக்கு ஒரு கட்டுரை எழுத வேண்டுமென்பது கல்லூரியின் பழைய மாணவரும், இன்றைய உதவி அதிபருமான திரு. அ. பஞ்சலிங்கம் அவர்களின் அன்புக் கட்டளை. திரு. எம். ஏ. நடராசா அவர்கள் என் தந்தையைப் போன்றவர். இவரைப் பற்றி எழுதும்படி எனக்குச் சந்தர்ப்பம் கிடைததமைக்குப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

எமது கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கம் கண்ட திரு. எம். ஏ. நடராசா அவர்கள் திரு. ஆறுமுகதாசருக்கும் அவரது இல்லறத்துணைவியான செல்லாச்சிப்பிள்ளைக்கும் மகனாக 25-9-1905 இல் பிறந்தார். கொழும்பு பழைய மாணவர் சங்கம் பிறந்தது 1944இல். தோற்றுவிக்கப்பட்ட இடம் வெள்ளவத்தை இராஜசிங்க வீதியில் 48ஆம் இலக்கத்திலுள்ள அவரது இல்லமென்றே சொல்லலாம். திரு. எம். ஏ. நடராசா அவர்களையும் எமது கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தையும் பிரித்துக் கூறுவதென்பது இயலாத காரியம். அவர்கள் கண்ட சங்கம், வெள்ளி விழா ஆண்டையும் கடந்து வளர்ந்து வருவதை நாம் அனைவரும் கண்டு பெருமையடைதல் வேண்டும்.

எங்கள் கல்லூரி தளிர்நடை பயிலும் காலத்து ஆசிரியப் பிரானாக அமைந்திருந்த திரு. செல்லையா அவர்களிடம் கல்வி கற்ற மாணாக்கர்களில் ஒருவர் திரு. எம். ஏ. நடராசா அவர்கள். பின்னர் இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் மேற்படிப்பை முடித்துக்கொண்டு, கணக்குப் பரிசோதனைத் திணைக்களத்தில் பரிசோதகராகக் கடமையாற்றினார். அப்போது அவரது நண்பர்களும் மற்றையோரும் அவரை அன்புகாரணமாக "ஓடிற்றர்" என அழைக்கலாயினர். அங்கிருந்து கணக்காளர் சோதனையில் சித்திபெற்று, திறைசேரி, காணி அபிவிருத்தித் திணைக்களம், உணவுக்கட்டுப்பாட்டுத் திணைக்களம் ஆகிய திணைக்களங்களில் பிரதம கணக்காளராகப் பணிபுரிந்தார். எப்பக்கத்திலிருந்து உபத்திரவங்கள் ஏற்பட்டாலும், பொறுமையுடன் பொறுப்பை நிறைவேற்றி, தமது சகாக்களின் பேரன்பையும் மதிப்பையும் பெற்றார். அரசாங்கத்தில் அவரது சேவை தர்மமும், சகோதர





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வும், சமத்துவமும், அன்பும் தழைக்க உதவவேண்டுமென உணர்ந்து செயல்பட்ட செம்மல் இவர்.

இக்காலக் கட்டத்திலேயே தன்னால் இயன்றதைத் தன் சமூகத்திற்கும் ஆற்ற வேண்டும் என்ற மனவேட்கை இவரைச் சமூகத்தோடு தொடர்புபடுத்தியது. தன்னைச் சூழ்ந்திருந்த சமூகத்திற்கும், குறிப்பாகத் தனது சொந்தக் கிராமமாகிய கொக்குவில் மக்களுக்கும் இவர் செய்த சேவைகள் அளப்பரியதாகும். அன்று "கொச்சைக் கொட்டில்களாய்க் கிடந்த எமது பாடசாலை, இன்று மூன்றடுக்கு மாளிகைகளாகப் பொலிவதற்குக் கால்கோளாக, கொழும்பில் பழைய மாணவர் சங்கத்தை அமைத்தமையே இவரின் சிறப்பான தொண்டாகும். சங்கம் ஆரம்பித்த அந்நாள் தொடக்கம் தனது இறுதி மூச்சு உள்ளவரை சங்கத்தின் உபதலைவராகவும் பணியாற்றிச் சங்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர் இவரே. கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் உயிர்நாடியாக விளங்கிய பெரியார் எம். ஏ. நடராசா அவர்கள், எங்கள் பாடசாலையில் அதிபர்களாக மாறி மாறிப் பொறுப்பேற்ற அத்தனைபேருடனும் அன்போடு பழகி அவர்களுக்குப் பக்கபலமாகவும் இருந்துள்ளார் என்றால் மிகையாகாது.

சங்கத்தின் செயற்குழுக் கூட்டங்கள் அநேகமாக இவரது இல்லத்திலேயே நடைபெறும். அச்சமயம் அங்குவருபவர்களை அன்போடு "வாருங்கள்" "வாருங்கள்" என்று மலர்ந்த முகத்தோடு வரவேற்பார். சாந்தம் தவழும் புன்னகையால் அனைவரையும் வசீகரித்து அவர்களுடன் உரையாடுவார். அது மட்டுமா! அங்கு குழுமியோர் எல்லோருக்கும் சிற்றுண்டியும் தேநீரும், ஒருமுறைதானும், தவறாது அளித்து ஆதரித்த அவரது விருந்தோம்பும் பண்பை எம்மால் எப்படி மறக்க முடியும்?

திரு. எம். ஏ. நடராசா அவர்கள் எங்கள் சங்கத்தில் இன்னும் எவ்வளவு ஈடுபாடுள்ளவராக இருந்தார் என்பதற்கு நான் நேரில் அனுபவ பூர்வமாக அறிந்த சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுவது சாலவும் பொருந்தும். 1960இல் எமது கல்லூரி முன்னாள் அதிபரில் ஒருவராகிய திரு. ஹண்டி பேரின்பநாயகம் சேவையினின்று ஓய்வு பெற்ற சமயம் நாங்கள் அவரின் சேவைகளை நினைவு கூரும் மலர் ஒன்றை வெளியிட்டோம். அப்போது எங்கள் சங்கத்தின் மதிப்பிற்குரிய உபதலைவர் அவர்கள் இருதயநோயால் பீடிக்கப்பட்டுக் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். நாங்கள் அன்னாரை வைத்தியசாலையில் சென்று கண்டு மலரின் முதற் பிரதியை அவர்களிடம் கையளித்தோம். அப்போது அவர் எங்கள் அரிய முயற்சியைக் கண்டு பிரமித்து, புளகாங்கிதம் அடைந்து, எங்களைப் பாராட்டி ஆனந்தக் கண்ணீர் சொரிந்து நின்ற காட்சி இன்றும் எமது கண்களில் அகலாது நிற்கின்றது.

திரு. சி. கே. கந்தசுவாமி அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபராகப் பொறுப்பேற்ற பொழுது எங்கள் சங்கம் அவருக்கு கொழும்புக் கோட்டையிலுள்ள வை. எம். சீ. ஏ. மேல்மாடி மண்டபத்தில் இராப்போசன விருந்தளித்துக் கௌரவிக்க ஆயத்தங்கள் செய்தது. திரு. எம். ஏ. நடராசா அவர்களை விருந்துபசார வைபவத்திற்குத் தலைமைதாங்கும்படி ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மாடிப்படி ஏறி வைபவத்திற்குத் தலைமைதாங்குவது இவர் உடல்நிலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உகந்ததல்லவென வைத்தியர்கள் சொல்லி விட்டனர். வைத்தியர்கள் வாக்கையும் மீறி, தமது உடல்நிலையையும் பொருட்படுத்தாது, மாடிப்படி ஏறிவந்து அன்றைய வைபவத்தில் தலைமை தாங்கிச் சிறப்பித்தார் என்றால் இவர் நோக்குவில் இந்தக் கல்லூரியிலும், அதன் கொழும்புப் பழைய மாணவர் சங்கத்திலும் வைத்திருந்த அன்பிற்கு நிகரேது!

ஒருநாள் அவர் வீட்டு வாசலுக்குக் கந்தை உடையுடுத்த ஓர் ஏழைப் பிச்சைக்காரன் ஒருவன் வந்திருந்தான். இவர் அவ்வேழைக்கு அன்று வயிறார உணவு கொடுத்ததோடு, தனது நல்ல வேட்டியில் ஒன்றையும் எடுத்துச் சென்று கொடுத்தாராம். இதைக் கண்ணுற்ற இவரின் மகள் "அப்பா! இது என்ன நீங்கள் செய்கிறீர்கள்" என்று வினவ, "மகளே! நீங்கள் எல்லாம் என்னுடன் வரமாட்டீர்கள்; இதுதான் என்னுடன் வரும்" என்று கூறி மகளைத் திகைக்க வைத்த பெரியார் மறுநாள் இவ்வுலகிலிருந்து மறைந்துவிட்டார். என்னே அதிசயம்!

அப்பழுக்கற்ற ஒழுக்கமான வாழ்க்கையும், எளிமையான நடத்தையும், ஆரவாரமற்ற போக்கும், உயர்ந்த பண்பும் கொண்டு விளங்கிய திரு. எம். ஏ. நடராசா அவர்களின் மறைவு நோக்குவில் இந்தக் கல்லூரிக்கும் அதன் கொழும்புப் பழைய மாணவர் சங்கத்திற்கும் பேரிழப்பாகும். இவர் எங்களை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டாலும் இவருடைய பெயரும் புகழும் நோக்குவில் இந்தக் கல்லூரி, கொழும்பு பழைய மாணவர்களின் நெஞ்சை விட்டு நீங்கமாட்டாது. வாழ்க திரு. எம். ஏ. நடராசா அவர்களின் திருநாமம்; வளர்க அன்னார் எமது கல்லூரிக்குச் செய்த தொண்டுகள்.

த. செ. நடராசா
உதவிக் கணக்காளர்,
கொழும்புத்திட்ட அலுவலகம்,
கொழும்பு.

★

## வாழ்த்துகிறோம்

எமது பழைய மாணவருள் ஒருவரான கலாநிதி T. இராஜச்சந்திரன் அவர்கள், எமது கல்லூரியில் வருடா வருடம் நடைபெறும் பேச்சுப் போட்டியில் முதலிடத்தைப் பெறும் மாணவனுக்குத் தங்கப் பதக்கமொன்றை அளித்து வருகிறார். இவர் சிறுபான்மையினரின் பிரச்சினைகளை உலகறியச் செய்ய ஓர் ஆங்கில ஏட்டினை இங்கிலாந்தில் நடாத்தி வருவது மெச்சத்தக்கது. அன்னாருக்கு எமது நன்றியும் வாழ்த்துக்களும்.

## OUR CONGRATULATIONS

We are glad to record that one of our distinguished old students Dr. K. Ramachandran, B. Sc. Eng., M. Sc., Ph. D., D. I. C., M. I. E., M. I. C. E., C. Eng., has submitted a paper on "Cycle Bases of Minimal Measure for the Structural Analysis of Skeletal Structures by the Flexibility Method" and this has been published in the Royal Society Proceedings of England. We congratulate him on his brilliant achievement.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# M. A. NADARAJAH

Senior Vice-President — K. H. C., O. S. A. (Colombo)

Born: 25-9-1905 Died: 9-8-1974

"Will he please stand up for us to see who our new Assistant Secretary is?" said a voice from the front benches. It was at the annual general meeting of the K.H.C., O.S.A. (Colombo branch) in 1949 held at the Saiva Mangayar Kalagam Hall, Wellawatte. The late Mr. V. Nagalingam, the then Principal, presided, and Mr. S. K. Murugiah was Secretary. Mr. S. Ratnasabapathy was elected Secretary for the new term, and I was to be his assistant. I stood up for the members to see me, as I was new to Colombo, having left school only the previous year. The voice from the front benches was that of one of our Vice-Presidents, Mr. M. A. Nadarajah. Within four months of that meeting, the Secretary resigned, and it fell to my lot to be the Secretary de facto. Young and inexperienced though I was, I need not have worried. Mr. Nadarajah was there to ease the burden of office for me, with guidance, encouragement and advice, lending his own broad shoulders, whenever necessity arose. My association with him, born during this time, grew over the years, and blossomed into fond affection. He had been my guide ever since, until death snatched him away.

Kokuvil Hindu College was very dear to him. To work for its progress was his cherished ambition. With his quiet dignity, his amiable manners, his generosity of mind and heart, he inspired several young Kokuvilites in Colombo into selfless and dedicated service to the sehool. His home at 48, Rajasinghe Road, Wellawatte, was virtually the association's headquarters, and the fountain source of old student activity.


It was not that Mr. Nadarajah had all his education at Kokuvil Hindu College. It was his childhood years that he spent there, from 1911 to 1917, under the late Mr. E. Chelliah, the founder of the school. But such was his sentimental attachment to his village and the village school that gave him his early mental nourishment, that he took it as a life-long mission to serve Kokuvil Hindu.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

கொழும்புவாழ் கொக்குவில் இந்துவின் பழைய மாணவர்கள்
எல்லோரையும் ஒருங்கு கூட்டிச் சங்கம் நிறுவிய
பெருந்தகை
திரு. *M. A.* நடராசா அவர்கட்கு.



திரு. M. A. நடராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

From Kokuvil Hindu, he moved on to Jaffna Hindu, where he had his schooling from 1917 to 1923. From there, he entered the University College, having won an Open Exhibition in Arts. Mr. C. Suntheralingam and the late Mr. S. A. Pakeman were amongst his teachers at the University College. Having passed his Intermediate examination in Economics in 1925, as an external student of the University of London, he took to Government employment. He served in the Audit Office so long that he wss popularly known as "Auditor Nadarajah". Out of Audit, he was promoted as an Assistant Accountant in 1943. In the Accountants' service he progressed swiftly and rose to Class I in 1958. He was Chief Accountant of the Food Department when he retired from government service in December, 1961.

Except for a brief two years spent in Kokuvil after retirement, Mr. Nadarajah spent all his adult years, nearly fifty of them, in Wellawatte. But distance was no barrier. His heart was always in Kokuvil, with its people and their school. While actively associating himself with the O. S. A. in Colombo, he also encouraged and assisted every succeeding Principal. The school concert staged in Colombo in 1945 was successful largely due to the valuable and dedicated efforts of people like Mr. Nadarajah, Mr. M. S. Thiruvilangam, Mr. S. Sangarasivam and Mr. S. K. Murugiah. Mr. Nadarajah was among those who accommodated a number of students and teachers in their homes during their stay in Colombo. Few people know the part played by Mr. Nadarajah in Colombo towards the success of the school carnival in Jaffna in 1950. He threw himself heart and soul into the other massive project launched by Mr. S. Handy Perinbanayagam in putting up a three-storeyed building for the school out of public funds. Mr. Nadarajah was also the cementing link that kept the occasional divisive forces in the Colombo O. S. A. together. His passing away in 1974 had left a void that is difficult to fill. The loss was indeed great, to the family. It was greater still, to Kokuvil Hindu.

**S. Ratnapragasam**

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எங்கள் கிருஷ்ணசாமி"

திராட்சை என்றதும் அதன் பழச் சுவை, அழகிய தோற்றம் என்பன யாவரது மனத்திலும் தோன்றுவது இயற்கை. ஆனால் இன்று திராட்சை என்றால் — கிருஷ்ணசாமி, கிருஷ்ணசாமி என்றால் — திராட்சை என்னும் தொடர்பை மாறி மாறி நினைக்கத்தக்க விதமாக இடம் பெற்றுவிட்டார் எங்கள் கிருஷ்ணசாமி. இது உண்மை. இவரிடமிருந்து நாம் கற்க வேண்டிய நற்பண்புகள் பல. அவரின் வாழ்க்கை வரலாற்றை இங்கு விரித்துக்கூற வாய்ப்பின்மையால் சுருக்கமாய் வரைகின்றேன்.

**தோற்றம் :**

திருநெல்வேலிப்பதியை பிறப்பிடமாய்க் கொண்டவர் "இலங்கைக் காவலர்" என்னும் சைவப்பெரியார். அன்னாரின் அருந்தவப் புதல்வராய் 1922-ம் ஆண்டு அவதரித்தார் திரு. கிருஷ்ணசாமி. இவருக்கு ஒரு தம்பி. சிறிய குடும்பம். இனிய வாழ்க்கை. வாழ்க்கையில் இன்ப துன்பம் ஏற்படுவது இயற்கையின் நியதி. இதற்கு அமைய சிறுவயதிலே அருமைத் தந்தை தாயரை இழந்தார் கிருஷ்ணசாமி.

**கல்வி :**

திருநெல்வேலி சைவ வித்தியாசாலையில் அவரும் நானும் கல்வி பயின்றோம். அப்பொழுது வகுப்பு ஐந்து. ஆசிரியர் திரு. சி. திருஞானசம்பந்தன். (இன்றைய முதுபெரும் தமிழ் எழுத்தாளனும், காந்தீயக் கொள்கையாளனும்) அன்று பாரத தேசமெங்கும் சுதந்திரதாகம் பரவிய காலம். மகாத்மாவை தலைவராகக் கொண்ட வீர, தீரர்களின் வாழ்க்கை வரலாறுகள் ஆசிரியர்மூலம் எம் இளம் உள்ளத்தில் நன்கு பதிந்து விட்டன. சிறப்பாகக் கிருஷ்ணசாமியரின் மன எழுச்சி தோன்ற பண்பட்ட காலம் அது. அவர் அப்பொழுதே தூய்மையான கதருடை, சைவாசாரப் போக்கு, சாதாரண வாழ்க்கை என்பவற்றில் செயல்பட்டார். கலாசாலை யில் பெருவிருப்பம் கொண்டதுடன் சித்திரத்துறையில் அலாதியான கைவண்ண முடையவராகி அதற்கான உயர்தரப் பரீட்சையிலும் சித்தியெய்தினார். ஆரம்பக் கல்விக்கான சைவவித்தியாசாலையும், மேற் படிப்பிற்கான நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையும் அவரின் சைவாசாரம், நல்லொழுக்கம் என்பவற்றிற்குப் பண்பட்ட விளைநிலங்களாய் அமைந்தன என்றால் அது மிகையல்ல.

**தேசசஞ்சாரமும் தொழிலும் :**

பேச்சு, எழுதது, விவேகம், யாவருடனும் அன்பாய்ப் பழகும் சுபாவம் என்னும் திறமைகள் ஒருங்கமையப் பெற்ற தன்மையால் அவர் ஈழநாட்டின் பல பாகங்களிலும் சென்று செவ்வனே வாழ்ந்தார். இது மாத்திரமல்ல, பாரத தேசத்தில் பலவிடங்களிலும் பல வருடங்களாகச் சுதந்திரப் பறவையாகத் திரிந்து வாழ்ந்தார். அங்கு கல்வி, சமய, அரசியல் துறைப் பெரியார்கள் பலரையும் சந்தித்துப் பழகி, இந்தியப் பண்பாட்டிலூறித் திளைத்தார். இது மட்டுமா? இல்லை. பொதுவுடமை நாடாம் ருசியாவிற்கும் பல வருடங்களுக்கு முன் சென்று சுற்றுலா செய்துள்ளார். தன்மான உணர்ச்சியால் சுயமரியாதையை உயிராய்ப் போற்றியவர். இதனால் தமக்குக் கிடைக்கும் நன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு கூருகிறோம்!



கொடை வள்ளலும், கல்லூரி நலன் விரும்பிகளில் ஒருவருமாகத் திகழ்ந்த
திரு. இ. கிருஷ்ணசாமி
அவர்கள்.



எமது கல்லூரி நாட்டிய அரங்கிற்கு எண்ணற்ற நர்த்தகிகளை உருவாக்கித் தந்த முன்னைநாள் நடன ஆசிரியர்
திரு. ஏ. சுப்பையா
அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் பொருட்படுத்தாது தனது மனதுக்குச் சரியல்லாத செயலை, சரியல்லாத இடத்தைத் தாமாகவே விட்டு விலகி விடுவார்.

## திருமணம் :

கலை உள்ளம் படைத்த சிலன் வாழ்க்கைத் துணையை நாடுவதிலும் புதுமையைக் கையாண்டார். அழகு, அறிவு, ஒழுக்கம், பண்பாடு என்பன நிறைந்த கன்னிகையாம் கமலாம்பிகையைத் தமதூரிலேயே துணைவியாகக் கொண்டார். ஒரு மனிதனது பண்பாடும், புகழும் மேலோங்க அவனது பரம்பரை, சூழல், குரு, தொழில், வாழ்க்கைத்துணை என்பன முக்கிய இடம் வகிக்கின்றன. இவையனைத்தும் கிருஷ்ணசாமியருக்கு ஒருங்கமையபெற்றன.

## நிலையான தொழில் :

மக்களால் விரும்பத்தக்க பல தொழில் திறமையும் இவரிடம் நிறைய உண்டு. அதிலும் அழகை ரசிக்கும் நோக்குடன் பூஞ்செடி, கொடிகளைப் பயிரிடுவதில் பேரார்வமுள்ளவர். சுருங்கச் சொன்னால், பூமாதேவியின் ஆசி பெற்றுப் பயிர்களைக் காதலித்துப் பயிரிடுவதில் கைராசியுடையவர். இதே வகையில்தான் திராட்சைக் கொடிகளைப் பயிரிடுவதிலும் அலாதியான பிரியம் கொண்டார். முறைப்படி பயிரிட்டுத் தக்கபயனும் பெற்றார். தானும் முன்னேறி மற்றவர்களும் முன்னேற முன்னோடியாய் விளங்கினர்.

## பரந்த மனப்பான்மை :

பணம் தேடும் நோக்கம் மட்டும் உடையவராயிருந்தால் சாதாரண மக்களைப் போன்று அவரும் மிளகாய், வெங்காயம், புகையிலை செய்கையில் ஈடுபட்டிருக்கலாம் அல்லவா? கமச்செய்கையில் ஒரு திருப்புமுனையைத் தோற்றுவிக்க முற்பட்டார். அதாவது நட்டம், நயம் என்பதைப் பொருட்படுத்தாது புதுஇனப் பயிரை, புதிய முறையில் பயிரிடவும் பயன்பெறவும் மனமுடையவரானர். பல்லாண்டு காலம் தேடுவாரற்றுக்கிடந்த வெற்றுநிலங்களையும், கலட்டு நிலங்களையும் பொன்கொழிக்கும் நிலங்களாக மாற்றும் புரட்சியாளரானர். வேலையற்றிருந்த படித்த பல இளைஞர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் தொழில் புரிந்து வாழ வகைசெய்தார். ஏன்? யாழ்பாணக் குடாநாடெங்கிலும், அதற்கு அப்பாலும் திராட்சையைப் பயிரிடுவதிலும் பயனைப் பெறுவதிலும் மக்களை ஊக்குவித்தார். பயிரிடுவோரும், பாவனையாளரும் பயனடையத்தக்கதான பல திட்டங்களைத் தயாரிப்பதிலும் பரிசோதனையிலும் ஈடுபட்டுக்கொண்டேயிருந்தார்.

## பரோபகாரம் :

தமது சுயமுயற்சியினுல் பெற்ற பணத்தை வகையறிந்து செலவு செய்வதில் திறமைமிக்கவர். புகழை விரும்பாது பிறர் அறியாத வகையில் செய்த பண உதவிகளும், பொருளுதவிகளும் பல. அவற்றுள் ஒன்று எங்கள் கல்லூரிக் கட்டிடத்திற்கு அளித்த நிதி உதவி. (ரூ. 10,000/-). இவ்வித நற்பணிகளுக்கும் பல திட்டங்களைத் தீர்மானித்திருந்தார். ஆனுல், அவை நிறைவேறுமுன்னே எதிர்பாராத வகையில் அவர் அமரத்துவம் அடைந்துவிட்டார். அன்னரது புகழுடம்பு நிலைத்து நிற்கின்றது.

" முயற்சி திருவினையாக்கும்."

சு. காசிநாதன்
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 YEAR MEMORIES

MRS. P. P. BHARGAVIAMMA
MR. M. SINNATHAMBY

It is perhaps part of the imperfection of human life that, when the present is upon us and the future beckons, the past recedes further and further. It is like a long train journey. We halt now and then, speed at time or slow down, the colour lights of life turn red and green, signals go up and down, flags are waved and whistles are blown, and eventually the very track on which we travel keeps disappearing from our view behind. And so with memories that are not kept green. They linger afresh for a time. Then they become hazy and blurred. How many of us do have the time, the mood, the patience or inclination to summon up snatches of the distant past? To drift backwards in Time on a magic carpet of Memory, get into an imaginary pair of shorts, and go "back to school" and capture in mind that part of oneself that is submerged within us, never to be directly experienced again?

When I was asked to write this, I promptly sat on the magic carpet, and there I was in a classroom at Kokuvil Hindu over thirty years ago. I went and sat for a while at the Form I "A" class, a little brat in shorts, along with a slightly bigger brat — just the two of us males in a classroom predominantly occupied with female creatures in pigtails and frocks. (And that is how, alas, long before I married my wife I learnt to put up with female domination!) Our class teacher was a female too, the most respected and feared female in Kokuvil, Mrs. P. P. Bhargaviamma herself. I cannot still figure out why my friend and I were shunted into an otherwise all-female class, when both the "B" and "C" divisions were all-male. But although the females outnumbered us, and at times giggled behind our backs, the situation was not altogether bad. Mrs. Bhargaviamma being a sensible female gave the two "offices" of the class to the two of us. My friend was the Monitor, while I was asked to take the portfolio of "Sanitary Inspector". You might wonder what sort of office that was. Well, believe it or not, part of my duties consisted of taking a good look at the girls' legs! I had to see that no



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

one came to the class with open, undressed wounds or neglected sores, and if anyone did, report the matter promptly to the class teacher. Mrs. Bhargaviamma's daughter was herself a student in the class, and it rebound to the credit of the class-teacher mother that the young lady was always spotlessly hygienic and never did I have occasion to report her.

At that time in Kokuvil Hindu, as a result of the initiative taken by Mrs. Bhargaviamma — let us refer to her as "Lady Teacher" because that was how she was known all her life at Kokuvil Hindu — every classroom had a cupboard full of English books, mostly A. L. Bright Story Readers. Now these books consisted of different grades, and each classroom stocked only the series appropriate to the class. May I say without any hesitation, that looking back in Time, the seeds of my future career as an English writer — journalist were planted by "Lady Teacher" at that very point in my boyhood life. It was she who first encouraged me to read outside the text books, and her daughter and I became such avid readers, that by the time I moved on to Form II, I had already completed reading not only the books in the Form I cupboard but those in the Form II one as well, specially borrowed for the two of us by "Lady Teacher".

Mr. M. Sinnathamby who taught me Tamil in later years, was a different kind of personality. Full of vim and vigour, walking with a rhythmic spring in his gait, his thyroid "hump" at the nape of his neck bobbing up and down as he walked, just above the neck-line of his national, he was a likeable "terror", in the classroom and outside. He always remained "M. S." to the students out of his earshot (we did not think it disrespectable to refer to him by his initials). He wore a thick gold ring in the third finger of his right hand, and while he taught I always made it a point to watch his right hand knuckles more than his face, because one was not sure when they would come down heavily on one's head with a hard knock. There were times when I managed to duck in time before the knock reached my cranium, but the alternative was worse when he grabbed my ear instead with a three-finger twist. The heavy ring made matters worse. But well-earned knocks and twists they proved to be, when I found myself in the Government Senior School Certificate Examination of December 1947 bagging a Distinction in Classical Tamil! (They had another paper called Modern Tamil considered less difficult.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Well, both "Lady Teacher" and "M. S." are no more with us — the living. The latter was a son of the Kokuvil soil who spent 32 years of his active life in Kokuvil Hindu. The former, born, bred and educatad in a different country, found her life mission in a totally different environment and became merged with it in a teaching career of 28½ years. Her mother tongue was not Tamil, but she acquired the necessary fluency and gave her spoken Tamil an attractive Malayalam drawl. She was the first graduate teacher to join Kokuvil, and by the time she left in 1957, she had left behind a symbolic image of a protective guardian and foster mother to a continuing bevy of girls year after year.

Both "Lady Teacher" and "M. S." had a passion for hard work, and solid dedication. In fact, "M. S." was a shining example of a teacher who continued to learn as he taught. A graduate, he passed his Bala Pandit and Madura Pandit examinations during his teaching years.

It is of course foolish to live in the past, but it is certainly good therapy to re-live the past occasionally. Remembering past achievements and even the follies of youth, equips us in our future living days with a better sense of proportion, a cheerful sense of values and a steadier sense of values. When the wounds of adolescent injuries have got healed with the passage of time, not even the scars remain. One learns to laugh over them. Things which we thought important twenty, thirty years ago, seem so no longer. Others which we took for granted then, appear invested with greater significance now. These always happen when we recall to memory our old teachers who are dead and gone from us. But then good teachers never die. Some part of them continue to live in the thousands and thousands of students who had passed through their hands sometime or other.

**S. Sivanayagam**

★

வாழ்க்கை என்பது போராட்டம்
வாழ்க்கை என்பது வேள்வி
வாழ்க்கை என்பது கடல்
புண்ணில்லாத போராட்டம் இல்லை
தீயில்லாத வேள்வி இல்லை
புயலில்லாத கடல் இல்லை.

— காண்டேகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி P. P. பார்கவியம்மா B. A.

1940-ம் ஆண்டுக்கு முன் தற்போதைய கொக்குவில் இந்துக் கல்லூரி "கொக்குவில் சைவ ஆங்கில வித்தியாசாலை" என்ற பெயரில் வழங்கி வந்தது. ஏறத்தாழ 1926-ம் ஆண்டளவில் கொக்குவில் சைவ ஆங்கில வித்தியாசாலையின் கிளையாகத் தனித்தமிழ்ப் பாடசாலை 1-ம், 2-ம், 3-ம் வகுப்புகளை உள்ளடங்கியதாக இயங்கியது. இவ்விரு பாடசாலைகளும் ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் படிக்கும் கலவன் பாடசாலைகளாக இயங்கின. கலவன் பாடசாலைகளில் பெண் ஆசிரியை ஒருவராவது இருக்க வேண்டுமென்பது அரசாங்கக் கட்டளை. ஆனால், தனித்தமிழ்ப் பாடசாலைக்குப் பயிற்றப்பட்ட ஆசிரியை ஒருவரை நியமனஞ் செய்ய வசதி ஏற்பட்ட போதிலும் ஆங்கில வித்தியாசாலைக்கு நிரந்தரமாக ஓர் ஆசிரியையைத் தெரிந்து கொள்வது கஷ்டமாக இருந்தது.

அயலூரில் உள்ள ஆங்கிலங் கற்பிக்கக்கூடிய பெண்கள் கொக்குவிலில் படிப்பிக்க அஞ்சியும் மறுத்தனர். ஏன், "கொக்குவிலைக் கண்டாற் கொழுவல், கொழுவிக் கொண்டால் இழுவல்" என்பது நாட்டுப் பழமொழி. உண்மையை அயல்கிராமத்தவர் அறிந்திலர். ஏனென்றால், கொக்குவிலுக்குள் வந்து சேர்ந்துவிட்டால் கண்ணைக் கண்ணிமை காப்பது போலக் காத்துக் கொள்வது கொக்குவிலின் சிறந்த குணம். ஆகவே, எது விதத்திலும் ஒரு நல்ல பெண் ஆசிரியை ஒருவரைக் கொக்குவிற் பள்ளிக்கூடம் உருவாக்கிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் வேறு வழி கிடையாமல், அப்போது தலைமை ஆசிரியராகவிருந்த திரு. மு. கார்த்திகேசு அவர்கள் முகாமைக்காரரின் அனுமதியோடு 'சென்னை இந்து' (Madras Hindu) என்ற புதினத்தாளில் ஒரு பெண் ஆசிரியைத் தேவையெனப் பிரசுரஞ் செய்வித்தார். அதன் பயனாக மனுச்செய்தவர்களை நேர்முகமாகக் கண்டு ஒருவரைத் தெரிந்து தரும்படி அக்காலத்தில் "யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி"த் தலைமையாசிரியராக இருந்த திரு. வெங்கடராமன் அவர்கள் வேண்டப்பட்டனர். அவர் தெரிந்து தகுந்தவராகக் கண்ட ஆசிரியையே திருமதி பார்கவியம்மா. அவர் யாழ்ப்பாணம் வரும்பொழுது விவாகமாகாத பெண். பின்னர்தான் விவாகமானார். அவர்தான் கொக்குவில் சைவ ஆங்கில வித்தியாசாலையில் நியமிக்கப்பெற்ற முதலாவது பட்டதாரி (B. A.). அவருடைய நாயகன் திரு. மாதவம்பிள்ளை M.A., B.L. அவர்களுக்கு இரு புத்திரர்கள், திருமதி பத்மாவதியும், திரு. சந்திரசேகரனுமாவர்.

இனி, திருமதி பார்கவியம்மாவின் வருகைக்கு முன் பெண் ஆசிரியையாகக் கடமையாற்றியவர்கள் சில மாதங்களுக்கு வேலைபார்த்துவிட்டுப் போய்விடுவது வழக்கம். ஆகவே, திருமதி பார்கவியம்மாவே நிரந்தர ஆசிரியையானார். அவரை மாணவரும் ஆசிரியர்களும் 'ரீச்சர்' (teacher) என்றே அழைப்பார்கள். அவர்தான் ஒரே ஒரு 'லேடி ரீச்சர்' (lady teacher). அதனாலே அவருக்குப்பின் எத்தனை பெண்ணாசிரியைகள் வந்து சேர்ந்து கடமையாற்றியபோதும், (teacher) 'ரீச்சர்' என்றால் திருமதி பார்கவியம்மாவையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கும். அவருக்கு இங்கு வந்தபொழுது தமிழ் பேசவாவது எழுதவாவது தெரியாது, ஆதலின் அவர் படிப்பித்த வகுப்புகளில் ஆங்கிலந்தான் புழங்கியது. அவர் விளக்குவதும் ஆங்கிலத்தில்; பிள்ளைகள் மறுமொழி சொல்வதும் ஆங்கிலத்தில். சில வருஷங்களுக்குள் அவர் தமிழை எழுதவும் வாசிக்கவும் பழகிக்கொண்டார்.

அவர் ஆசிரியையாகக் கடமையைச் செவ்வனே நடாத்தி வந்தார். பெண்பிள்ளைகளின் ஒழுக்கத்தையும் நடைமுறைகளையும் கண்காணித்து வந்தார். 1940-ம் ஆண்டுவரை 8-ம் வகுப்பு வரைதான் கல்வி கற்பிக்கப்பட்டது. அதன்பின், மாணவர்கள் (ஆண்கள்) யாழ்ப்பாணம் இந்துக் கலலூரிக்குக் கல்வி கற்கப்போவது வழக்கம். ஓர் ஆசிரியரின் திறமையை மாணவர்தான் சரியாக மதிக்க முடியும். அவரிடம் ஆங்கிலம் கற்றுச் சென்றவர்கள் இலக்கண வரம்பு கடவாமல் ஆங்கிலம் எழுதவும், பேசவும் தெரிந்திருந்தார்கள். இதைப் பழைய மாணவர் வாயிலாக இக்கட்டுரையாளர் அறிந்தார். எனவே, அவர் தம்மறிவைச் சிரத்தையோடு கற்பித்தார் என்பது புலனாயிற்று. அவர் அந்தக் காலத்தில் மாணவரின் பயிற்சிக்காக நடத்தப்பட்ட **மாணவர் கல்விக் கழகத்துக்குத்** தலைமை தாங்கி, பிள்ளைகளை வழிப்படுத்தினர்.

பள்ளிக்கூடத்தில் பல ஆண்டுகளாகப் பெண்பிள்ளைகளை நல்லொழுக்கத்தைப் பின்பற்றி நடக்கச் செய்வதில் கண்ணுங் கருத்துமாக இருந்தார். இந்திய சைவப் பண்புக்கு அமைந்த பழக்க வழக்கங்களையே மாணவருக்குச் சொல்லிக் கொடுத்தார். அதனால் பெற்றோர் தங்கள் வளர்ந்த பெண்பிள்ளைகளைத் தாய்போற் கவனிப்பார் என்ற நம்பிக்கையோடு பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வந்தார்கள். பல ஆண்டுகளாகக் கல்லூரி ஆசிரியராக இருந்ததுமன்றி, கொக்குவில் கிராமவாசிகளில் ஒருவராக, சமூகத்தில் வாழ்ந்து கிராம மக்களின் இதயத்தில் இடம்பெற்று விட்டார்.

பின்பு 1940-ல் பள்ளிக்கூடம் தரம் உயர்த்தப்பட்டு, "கொக்குவில் இந்துக் கல்லூரி" எனப் புதுப்பெயர் கொண்ட பொழுது பல திறப்பட்ட மாற்றங்களும் எழலாயின. மேலைத்தேச நாகரீகத்தால் கட்டுப்பாட்டின் எல்லையை மீறி, ஏனைய பள்ளிக்கூடங்கள் போல ஆசிரிய மாணவ போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டன. திருமதி பார்கவியம்மாவின் போக்கு எல்லாருக்கும் பிடித்ததாக இருக்கவில்லை. எது நடந்தபோதிலும் திருமதி பார்கவியம்மா தம் கொள்கையை மாற்றாது ஏனைய ஆசிரியைகளுக்கு எடுத்துக் காட்டாகவும், ஒரு தாய்போல் ஏனைய ஆசிரியைகளால் மதிக்கப்பெற்றவராயும் வாழ்ந்து 28 ஆண்டுகள் சேவை புரிந்தபின் 1957-ல் ஓய்வு பெற்றுத் தம்முடைய சொந்த ஊருக்குச் சென்றார். அவர் மலையாளத்தில் செங்கனூர் என்னுங் கிராமத்தில் வாழ்ந்து வந்தார். அவருடைய இரு பிள்ளைகளும் கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர்கள். பெண்குழந்தை பத்மாவதி, ஆண்பிள்ளை சந்திரசேகரன். இவர் சென்னையில் கல்வி பயின்று B. Sc , M. L. ஆகி உத்தியோகமாகியிருக்கிறார். மகள் பத்மாவதி தம் கணவரோடு Zambia இல் வசிக்கிறார். திருமதி பார்கவியம்மா தம் கணவரை 17-4-1967-ல் இழந்தார். பின் 1-5-1975-ல் தாம் காலமாயினர். மகன் எழுதிய கடிதத்தில் ஒரு குறிப்புக் காணப்பட்டது. திருமதி பார்கவியம்மா தன்னைக் கொக்குவிலுக்கு ஒரு முறையாவது அழைத்துச் செல்லும்படி கேட்டிருந்தார் என்றும், அதைத் தான் செய்யத் தவறிய குற்றம் தன் மனத்தை உறுத்துகிறது என்றும் குறிப்பிட்டார். ஆம், கொக்குவிலைக் கண்டால் கொழுவல், கொழுவிக் கொண்டால் இழுவல்' என்பது இதுதான்.

அவர் ஆத்மா சாந்தியடைவதாக.

**சக ஆசிரியர்**

# பாரதி கண்ட சமுதாயம்

பாரதி புதிய தமிழகத்தின் "விடி வெள்ளி". மறுமலர்ச்சியின் சங்க நாதம்! சாதாரண சனங்களின் உள்ளத்தில் பிரதி பலிப்பவன் தமிழன் மறுமலர்ச்சியை யுண்டு பண்ணிய சிற்பி. "சுப்பிரமணிய பாரதி" பண்டைக் காலத்தில் தமிழ் பண்டிதர்களின் சொத்தாய்க் கருதப்பட்டவன் புதுமைக்கவி பாரதிதான். புரட்சிப்பாவலன் பாரதிதான் தமிழருக்கும் அவர்களது பண்புக்கும் முதல் குரல் கிளப்பிய புலவன். இப் புரட்சிப் பாவலன் சிந்தனைத் தேனில் உதித்ததுதான் எளிய தமிழ். இக்கவிஞன் மனத்தில் ஊற்றெடுத்து உருவாகிய கவிகள் சிந்தனையைச் சீர்தூக்கித் தூண்டும் செம்மையுடையன.

சிங்காரத் தமிழ் சீரழியும் நேரம், முத்தமிழ் முழங்கும் நேரம், சிந்தனையைத் தூண்டும் தமிழ் சிதையும் நேரம், செந்தமிழ் சாயும் நேரம் பிறந்தான் பாரதி! தமிழ்த் தென்றல் வீசும் தமிழ்த்தாயின் மடியிலே எத்தனையோ கவிஞர்கள் தவழ்ந்தார்கள். இதில் ஒருவன்தான் பாரதி. சில கவிஞர்கள் தங்கள் கவிகளை வயிற்றுக்காகவும் பொருளுக்காகவும் விற்றனர். சிலர் தென்றல் காற்றில் அசையும் முல்லைக் கொடியையும் அரும்பு நகை ததும்பும் பூவிதழ்களைப் பற்றியும் வருணித்தனர். வேறுசிலர் ஏழைகளைச் சுரண்டி வாழும் ஜமீன்தார்களைப் பற்றிப் பாடினர். ஆனால் பாரதி வானமே வீடு, மண்ணே பாய், கஞ்சியே யுணவு என்று எண்ணி வாழ்ந்த உழவர்களையும் ஏழைகளையும் பற்றிப் பாடினன். ஆதலால் தான் சாதாரண ஜனங்களினுள்ளத்தில் பிரதிபலிக்கின்றான். சோம்பேறி வாழ்க்கை மேற்கொண்ட இந்தியர்களுக்கு சுதந்திர ஆர்வத்தையூட்டக் கவி புனைந்தான்.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்ற வானினும் நனிசிறந்தனவே"

என்று பாடி பாட்டாளி மக்களையும் பாமர மக்களையும் தூண்டிவிட்டார். விடுதலை வேண்டுமெனச் சங்கநாதம் செய்தார். இத்துடன் நின்றுவிடவில்லை. நாம் என்ன கோழைகளா? அல்லது வெள்ளையரிலும் தாழ்ந்தவர்களா? சிறைச்சாலை துப்பாக்கி இவை எல்லாம் என்ன செய்யும் அஞ்சவேண்டாம்.

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லையே"

என்று வீரக் குரல் முழக்கி மக்களுக்கு இருந்த திகிலைத் தீமூட்டியும் சாம்பராக்கினார். புறப்படுங்கள் போருக்கு. விடுதலை, அதுவே விமோசன வாசல் என்று பதுங்கிக் கிடந்த பாமர மக்களை உணர்ச்சியூட்டிய பெருமை பாரதிக்கே உரியதாகும்.

நாட்டை நாசமாக்கும் ஜாதித்துவேஷம் இருக்கக்கூடாது எனக் கூறினார். பாடினார்: ஏழை பணக்காரர் வதனத்தைப் பார்த்தார்.

"ஏழை என்றும் அடிமை என்றும்
எவருமில்லைச் சாதியில்"

என்ற இதயஒலியை உலகறியக் கூறினர். இனத்துவேஷம் பிடித்து, இரத்தவெறி பிடித்து ஆட்சி செய்த வெள்ளையர்களுக்கும் தங்களைவிட உயர்ந்தவர்கள் இல்லை என எண்ணிப் போற்றும் பார்ப்பருக்கும் பகிரங்கமாகக் கூறினன். என்ன?

"பார்ப்பானை ஐயர் என்ற சாலமும் போச்சே
சாதிக் கொடுமைகள் சொல்வார் - அதில்
தாழ்வென்றும் மேல்என்றும் கொள்வார்
நீதிப் பிரிவினை செய்வார் - அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்"

மழலை பேசும் சின்னஞ்சிறு குழந்தைகளினுள்ளத்திலே தீண்டாமை என்ற கொடிய விஷத்தை வளரவிடக் கூடாது என்ற எண்ணத்தில்

"சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாப்பாக்கு அறிவுறுத்துகின்றார். வர்ணங்கள் வேற்றுமைப்பட்டால் அதில் மானிடர் வேற்றுமையில்லை. சாதிக் கொடுமைகள் வேண்டாம். அன்புதன்னில் செழிக்கலாம். சாதியில் சமூகம் சீரழியும். அன்பினால் வையகம் செழிக்கும் என்றார். பாரதியார். அவர் கருத்து உலகுக்கோர் புதுமை.

சிலர் பாரதி தமிழ் கலாச்சாரத்தையும் பண்பையும் அழிக்க முயல்கிறார்கள். இது சுலபமான காரியமல்ல. இலங்கையிலும் பாரதி தமிழ் பூத்துக் குலுங்கும் நன்னாள் வெகு தூரத்திலில்லை. மிக அண்......

பஞ்சாட்சரம் யசோதா
*10A (H. N. C. E.)*

*****

# "போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து"

நாம் நமது வாழ்க்கையிலிருந்து பெறும் அறிவு அனுபவ அறிவெனப்படும். நூலறிவை விட அனுபவ அறிவே சிறந்தது. நம் முன்னோர்கள் பண்பட்ட வாழ்வு நடத்தியவர்கள். அவர்களது பழுத்த வாழ்விலிருந்து பிறந்து தொன்று தொட்டு வழங்கி வரும் மொழிகளே பழமொழிகள். அவைகள் அறிவுறுத்தும் அரிய கருத்துக்கள் நாம் நல்வாழ்வு வாழத் துணை செய்வன. நாம் அனைவரும் நல்வாழ்வு வாழவும் இன்பமாக இருக்கவுமே விரும்புகின்றோம். விரும்பி இடையறாது முயல்கின்றோம். ஆனால் நம்மில் மிகச் சிலரே இன்பத்தை அடைகின்றனர். காரணம் என்ன? இன்பத்திற்குரிய காரணம் புறத்திலன்றி நமது அகத்திலே இருப்பதுதான். இன்பத்திற்குரிய காரணத்தை அகத்தே பெற்றவர்கள் இன்ப வாழ்வு நடத்துகின்றார்கள். இதுவே இப் பொன்மொழி தரும் பேருண்மை.

பொருளிலார்க் கிவ்வுலகமில்லை என்று கருதும் பலர் பொருள் தேடுவதிலேயே வாழ்நாள் முழுவதையும் செலவழிக்கின்றார்கள். இரவுபகலாக எண்ணி எண்ணித் திட்டமிடுகின்றார்கள். உணவையும் உறக்கத்தையும் சுருக்கிப் பணத்தையே உயிரென மதித்துப் பாடுபடுகின்றார்கள் நாம் தேடிய செல்வத்தைக் கண்ணும் கருத்துமாகக் காக்கின்றார்கள். தக்கவழிகளில் முதலிட்டுப் பெருக்குகிறார்கள். தாங்கள் கருதிய பெருந்தொகைப் பொருள் சேருமளவும் சோரமாட்டார்கள். சுற்றத்தவர் துன்பத்தைத் துடைக்கமாட்டார். தமக்குப் புகழுண்டாக நடக்கமாட்டார். முதுமை வந்ததென்றும் ஓயமாட்டார். மரணம் வந்ததென்றும் சாயமாட்டார். அந்தோ அவர்கள் தாம் கருதிய பொருளினைப் பெற்றாருமல்லர். ஒரு கணப் பொழுதாவது இன்பம் உற்றாருமல்லர். பல்லாண்டு வாழ்ந்து பலவாறு உழன்று பயனற்ற வாழ்வு கண்டாரன்றித் தமக்கும் பிறர்க்கும் ஒரு பயன் கண்டாரல்லர்.

மனநிறைவற்று ஈயாது பொருள் தேடுபவனின் செல்வத்தைத் தாயத்தார் கவர முயல்வர்; கள்வர் கவர்ந்து செல்வர். இவ்வாறு தேடிய பொருளை அனுபவியாது இழப்பவன் தேனீ போலத் துயருறுவான். அந்தோ பிறர் கவர்ந்தனுபவிப்பதற்காய்ப் பொருள் தேடுபவரின் மதி என்னே!

மக்களுக்கு மனநிறைவு உண்டாகாதமைக்குரிய காரணம் யாது? எல்லா நிறைவுமிருந்தும் மனநிறைவொன்றில்லாமையாலன்றோ மனிதன் வாழ்வு பாழாகின்றது. ஒருவனது மனநிறைவைக் குலைப்பது அவன் தன் நிலையையும் பிறர் நிலையையும் ஒப்புநோக்குமியல்பே. செல்வத்தில் இச்சையுடையவன் பெருஞ்செல்வனையே மதித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன்போல் ஆவதற்கு அல்லும் பகலும் கனவு காண்கிருன். புகழில் விருப்புடையோன் ஒரு பெரும் புகழாளனைத் தன் இலட்சிய புருடனுகக் கருதுகிருன். கல்வியில் நாட்டமுடையவன் தான் மதிக்கும் கற்றுன்போல உயரக் கற்பனை செய்கிருன். இவ்வித ஒப்புநோக்கு ஒருவனை உயர்த்த வல்லதே ஆயினும் செல்வர்க்கு உகந்ததன்று ஏன்? செல்வத்திற்கு எல்லையில்லை. செல்வம் முற்றவத்தான் வருவது. முயற்சியான் வருவதன்று என அறநூல்கள் கூறுகின்றன. அறிஞர்கள் அவ்வுண்மை மனத்துட் கொண்டுள்ள பொருளோடுள்ள நிறைவு பெற்றிருப்பர்.

தேடிய செல்வம் போதுமென்ற மன நிறைவு வேண்டும். ஆனல் கற்ற கல்வியில் போதாது என்ற மனக்குறை வேண்டும். செல்வம் பெருகுத்தோறும் அதைப்பற்றிய கவலையும் பெருகும். கல்வி நிறையும்தோறும் அதனலாம் இன்பமும் நிறையும். அதனற்றுன் பொருள்நிலையில் போதுமென்ற மன நிறைவு இன்றியமையாதது.

மனிதனுக்கு அறமும் இன்பமுமே வாழ்க்கையிலடையும் பயன், பொருளன்று. பொருளானது அறத்தையும் இன்பத்தையும் அடைய ஏதுவான கருவி. இதையறியாதவர் பொருளை மாத்திரம் தேடி அறத்தையும் இன்பத்தையும் கைவிடுகின்றனர். பொருளாசை பிடித்த ஒருவன் தான் தொட்டதெல்லாம் பொன்னுக வேண்டும் என்று வரம் பெற்றுன். அதன் பயனுக அவன் தொட்ட உணவு பொன்னுயது. அதனல் உணவின்றி வருந்தினன். உடை பொன்னுயது; மானமிழந்தான். அவன் பொன்னுசை தன்னுயிர்க்கே பொல்லாததெனக் கண்டான். மீண்டும் கடவுளை இரந்து மன நிறைவொன்றையே வேண்டி மகிழ்வுற்றுன். அவனைப் போன்ற ஆசைப் பேய் பிடித்தோர் இன்னும் பலருளர்.

போதுமென்ற மனநிறைவுடையவன் பொருளாசையில்லான் என்பது மாத்திரமன்றிப் பொருமையுமிலன். ஆனல் அனுதாபம் உள்ளான். தன்னலம் பாராது மன்னுயிர் அனைத்தையும் ஓம்புவான். மனநிறைவுடையவன் ஒருவனே அறம், பொருள், இன்பம் மூன்றையுமுடையவன். ஆகவே எல்லோரும் மக்களாக வாழவேண்டுமானல் மனநிறைவொன்றையே தேடி அதனைப் போற்றி வளர்க்கவேண்டும்.

"செல்வமென்பது சிந்தையின் நிறைவே."

மதிவதனி நல்லையா
8 A

*****

# உண்மை உள்ளம்

நெற்றி வியர்வையாலும், உண்மையின் உயர்வாலும் முன்னேறிய கிராமம் ஒன்றில் ராமு என்ற அநாதைச் சிறுவன் வாழ்ந்து வந்தான். அவனது தாய், தந்தையர் சமீப காலத்தில்தான் இறந்தார்கள். இவன் தனது உணவிற்குக் கூட கஷ்டப்பட்டான். அந்நேரத்தில் அக்கிராமத்திற்கு ஒளிவிளக்காக சோமசுந்தரப் பெரியார் ஒருவர் வந்தார். அவர் அக்கிராமத்திற்கு வந்தபோது வழி தெரியாமற் திண்டாடினர். அப்போது ராமு அவருக்கு வழிகாட்டி உதவினன். அதைப் பார்த்த இப்பெரியார் ராமுவை விரும்பி, அவனிடம் மேலும் பல நற்குணங்கள் இருப்பதைக் கண்டார். அவர் அவனது வாழ்க்கை வரலாற்றையும் அறிந்தார். எனவே, அவர் அவனை தன் வீட்டில் வளர்க்க விரும்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமுவும் அதற்கு ஆட்சேபிக்கவில்லையான படியால் ராமுவை தன்னுடைய பட்டினத்திற்கு கொண்டு சென்று அவனை படிப்பித்தார். இப்பெரியாருக்கு ஒரேயொரு மகன் இருந்தான். அவன் பெயர் ரகு. ரகுவும், ராமுவும் ஒன்ருகவே பாடசாலைக்கு சென்ருர்கள்.

ரகு பாடசாலை விட்டதும் தன் சக நண்பர்களுடன் சீட்டாடிவிட்டுத்தான் வீட்டிற்குத் திரும்புவான். ராமு வீட்டிற்குச் சென்று கவனமாகப் படிப்பான். ஒவ்வொரு வருடத்திலும் நடக்கும் இல்லப் போட்டியிலும் ராமு முன்னுக்கு நிற்பான். ஒவ்வொரு ஆண்டிறுதிப் பரீட்சையிலும் முதல் மாணவனுகத் தேறுவான் இப்படி எல்லாப் பரீட்சையிலும் வெற்றியடைந்து, பல்கலைக்கழகம் சென்று மிக உயர்ந்த உத்தியோகத்திலிருந்தான். ரகு படிப்பில் குறைந்தவனுகி, கெட்டவர்களோடு சேர்ந்து கெட்டவனுகவே வாழ்ந்தான். இப்படியிருக்கும் காலத்தில் ராமுவை ஆதரித்து வந்த சோமசுந்தரப் பெரியார் காலமானுர். இவர் காலமானதும் ரகு, ராமுவை வீட்டை விட்டுத்துரத்தி வீட்டையும் விற்று கெட்டவர்களுடன் சேர்ந்து மேலும் கெட்டுப்போய் வறியவனுனன். வீட்டையும் விற்றதும் இருக்க இடமின்றி புகையிரத நிலையத்தில் படுத்துறங்கினுன். பகல் வேளைகளில் தெருத்தெருவாய் திரிந்தான். அவன் கையில் பணமிருக்கும் போது அவனுடன் இருந்த நண்பர்கள் எல்லோரும் இப்போது அவனை விட்டுப்பிரிந்தார்கள். ரகு இப்போதுதான் தன் தவறுகளைப் புரிந்தான். ஒரு நாள் ரகு பசிக்களைப் பால் ஒரு தெருவில் தள்ளாடி வந்து கொண்டிருக்கும் போது அவன் பின்னுல் வந்த கார் ஒன்று அவனை மோதியது. அக்காரின் பின்னுல் வந்த ராமு அவனைக்கண்டு ரகுவை உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்ருன்.

ரகு கண் விழித்துப் பார்த்தபோது, ராமு தன்னுடனிருப்பதைக் கண்டான். விபத்தில் நன்ருக ரகுவின் குருதி போயிருப்பதால் ரகுவிற்கு குருதி போதவில்லையென டாக்டர் கூறினுர். ராமுவின் குருதியை எடுத்துப் பரிசோதித்த டாக்டர் ராமுவின் குருதி ரகுவிற்குப் பொருந்தியது. எனவே ராமுவின் குருதி ரகுவிற்கு கொடுக்கப்பட்டது. இதிலிருந்து ரகு திருந்தினுன். ராமுவின் நற்குணத்தைப் போற்றி அவனுடன் சேர்ந்து வாழலானுன்.

பா. ஜெயலட்சுமி
9 B

****

# அன்பு

உலகம் வாழ்வதற்கே முதற்காரணமாய் அமைந்தது அன்பு. புத்தர் கால் ஒடிந்த ஆட்டிற்காக கண்ணீர் விட்டார். காந்தியடிகள் தேசப்பற்றினுல் உண்ணுவிரதம் இருந்தார். ஆபிரகாம் லிங்கன் செய்த அரும் பெரும் அற்புதம் அன்பில் தான். இப்படிப் பட்ட பெரியோர்கள் இறந்து விட்டாலும் அவர்களின் புகழுடம்பு இன்னும் இறக்கவில்லை. ஏனென்ருல் அவர்கள் உலகத்தின் மீது வைத்த அன்பே! இந்த அன்பு பல வித வடிவமெடுத்து உலகிலே நடமாடுகிறது.

தாய், சேய் மேல் அன்பு செலுத்துவது "பாசம்" எனப்படும். பாசம் அன்பின் முக்கியமான வடிவம். பாசம் எதையும் செய்ய வல்லது. அது ஆயுதத்தைக் கண்டாலும் பயப்படாது. வாலிபப் பருவமடைந்த ஆண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண்மேல் அன்பு கொள்வது காதல் எனப்படும். இதுவும் ஒரு அன்பின் வடிவம். சலீம் அனுர்கலிமீது அளவு கடந்த காதல் கொண்டு ஈற்றில் அவள் கிடைக்காமல் போகவே அவளையே நினைத்து உயிர் துறந்தான். தன் அருமைக் காதலி இறந்ததனுல் தாஜ்மஹாலையே நிறுவினுன் சாஜஹான். சகோதரர்கள் இருவரிடையே ஏற்படும் அன்பு பாசம் எனப்படும். இப்படியான பலவகை உருவத்துடன் உலகில் அன்பு ஒற்றுமையை வளர்க்கிறது.

பாரி வள்ளலின் பெருந்தன்மையே ஒரு சிறப்புக்குச் சான்ருகும். முல்லைக்கொடி படர்வதற்குத் தன் தேரையே கொடுத்த பாரியின் அன்பை என்னவெனக் கூறலாம்! சாக்கிரட்டீஸ் இறக்கும்வரை உலகத்திலே யுள்ளவர்க்கு அன்புப் போதனைகளைக் கூறினுர். கண்ணப்பநாயனுர் கடவுட் பக்தியினுல் தன் கண்களையே இழந்தார். அன்பு உள்ளவனே உலகத்திலே வாழத் தெரிந்தவன். இன்பங்களை அனுபவிக்க இயலாதவர்களுக்கு அன்பு ஒரு சிறந்த வழிகாட்டி. அதுமட்டுமல்ல உலகத்திலே பெயருடனும் புகழுடனும் வாழ்பவர்கள் கைக்கொண்டது அன்பே. துன்பஞ் சூழும் நேரம் அன்பு கருணை காட்டும். பாசம், காதல், பக்தி, நட்பு ஆகியனவற்றில் ஒன்றைக் கடைப்பிடிப்பவர்களது உள்ளங்கள் என்றும் இன்பத்தை அனுபவிக்கும்!

அன்புதான் உலக மகா ஜோதி!
அன்புதான் உலக மகா சக்தி!!
அன்புதான் சமுதாயம்!!

பு. உதயகுமார்
7 E

******

# உள்நாட்டு விவசாயமும் நிலச்சீர்திருத்தமும்

இலங்கை விவசாய பொருளாதாரம் என்ற அளவில் விவசாயத்துறை தொடர்பான பல்வேறு விடயங்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுபடுகின்றது. விவசாயிகள் குடும்ப முறையினை உற்பத்திப் பயிர்கள் விவசாயக் கடன், நிலச் சீர்திருத்தம், உற்பத்தித்திறன், நீர்ப்பாசனம் போன்ற பல அம்சங்களுக்கும் மிகக் கூடுதலான முக்கியத்துவம் கொடுபடுகின்றது. விவசாயத்துறை என்னும்போது ஏற்றுமதி வர்த்தகத்தில் பெருந்தோட்டத்துறை முக்கியத்துவத்தினைப் பெறுவதனைப் போன்று உள்நாட்டுத் தேவையின் அடிப்படையில் உள்நாட்டு விவசாயத்துறையும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இலங்கையில் 1972-இல் மேற்கொள்ளப்பட்ட நிலச்சீர்திருத்தச் சட்ட நடவடிக்கைகள் உள்நாட்டு விவசாயத் துறையைப் பெருமளவிற்கு மாற்றியுள்ளன.

உள்நாட்டு விவசாயத்துறை என்னும் போது பெருந்தோட்ட விவசாயம் தவிர்ந்த பிறவிவசாயத்துறை முழுதனையும் உள் அடக்கலால் இது பெரும்பாலான காரணங்களை உள் அடக்கியதாக உள்ளது. 80% மக்கள் கிராமியத் துறையிலும் குறிப்பாக உள் விவசாயத்துறையிலும் தங்கியுள்ளன. இலங்கையில் தொழிற்படையினர் 57%இனர் விவசாயத்துறையில் ஈடுபடுகின்றனர். நெல் உற்பத்தியில் மாத்திரம் ஏறக்குறைய ஏழு இலட்சம் குடும்பங்கள் தங்கியுள்ளன. இத்தசைய பெரும்பகுதி மக்கள் தங்கியுள்ள இத்துறை ஒழுங்கு படுத்தப்படாததாகவே உள்ளது உள்நாட்டு விவசாயத்துறை என்னும் போது நெல் உற்பத்தியை அடியாகக் கொண்ட துறையாகவும், உப உணவுப் பயிர்களாய வெங்காயம், மிளகாய், பச்சை மிளகாய், கிழங்கு, பருப்புவகை, சிறுதானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் துறையாகவும் காணப்படுகின்றது. இவற்றுடன் மிருக வேளாண்மை, கடல் உற்பத்திகள் அனைத்தையும் இத்துறையில் உள்ளடக்கலாம். இவ்வாறான துறையின் தேசிய ரீதியான முக்கியத்துவம் அதிகமானதெனலாம். பெருந்தோட்ட விவசாயத்துறையுடன், உள்நாட்டு விவசாயத்துறையும் சேர்ந்து அதிக முக்கியத்துவம் உடையதாக உள்ளது. அத்துடன் அனுகூலங்களை பின் வருமாறு ஒழுங்குபடுத்தலாம்.

A. பெரும்பகுதி மக்கள் தங்கியிருக்கும் துறை இது என்பதாகும் பெரும்பகுதி மக்களின் வாழ்க்கை நலனை உயர்த்துவதற்கு இத்துறையில் அபிவிருத்தி உதவுமென்றளவில் இது முக்கியமானதாகும்.

B. எதிர்காலத்தில் அதிகளவு தொழில் வாய்ப்பினை தரக்கூடிய முக்கியமான துறையும் இதுவேயாகும். அண்மைக்கால ஐந்து ஆண்டு திட்டத்திலும் மிகக் கூடுதலான தொழில் வாய்ப்புகள் விவசாயத் துறையில் இருந்து கிடைக்கும் எனப்பட்டது. எதிர்காலத்திலும் இது அதிக தொழில் வாய்ப்புகளைத் தரும். இதனால் இது முக்கியமானதாகும்.

C. இலங்கையில் பயன்படுத்தக்கூடிய வளம் விவசாயத்துறையில் அதிகமாக உண்டு இவை அனைத்தையும் பூரணமாக பயன்படுத்துவதால் அபிவிருத்திப்போக்கு மேலும் உயரும், உற்பத்தி தொழில் வாய்ப்பு வருமானம் என்பனகூட அதிகரிக்கும் இவ்வாறு எதிர்கால அபிவிருத்திக்கான தன்மைகளைக் கொண்டுள்ளது என்ற அளவில் இது முக்கியமானதாகும்.

D. உள்நாட்டில் சிறு கைத்தொழில்துறை ஒன்றை எதிர்காலத்தில் தொழில் செறிவான முறையில் உருவாக்கவேண்டி உள்ளது. அத்தகைய வாய்ப்புக்களை விவசாயத் துறையுடன் தொடர்புடையதாகவே உருவாக்கிக் கொள்ளமுடியும். அதாவது நலன் சார் கைத்தொழில்களை விருத்தி செய்வதே மிகச் சிறந்ததாகும். பழம் தகரத்தில் அடைத்தல், தாவர நெய் தயாரித்தல், கைத்திற மரச் சிற்பங்கள் உற்பத்தி செய்தல் போன்றவையும் ஆயுள்வேத மூலிகைகளை பதப்படுத்தலும் இவ்வாறு உருவாக்கக் கூடிய புதிய கைத்தொழிலாகும். இவற்றிற்கு உதவும் என்ற முறையிலும் இது முக்கியமானது.

E. மரபு ரீதியற்ற ஏற்றுமதித் துறையிலும் விவசாயத்துறையின் பங்கு முக்கியமாகும். மரபு ரீதியற்ற பொருட்களின் ஏற்றுமதியை பெருக்குவதற்கும் இத்துறையின் வளர்ச்சி அவசியமாகும். மூலிகைகள் பூக்கள், பழவகைகள், பழச்சாறு, மரச் சிற்பங்கள், தாவரநெய், கடல் அட்டை போன்ற பல புதிய ஏற்றுமதி பண்டங்களையும் பெற்று செலாவணி உழைப்பதற்கும் இத்துறையின் அபிவிருத்தி முக்கியமானதாக காணப்படுகின்றது.

F. சமூக ரீதியின் அடிப்படையில் தாழ்வருமானமுள்ள ஒரு பெரும்பகுதி மக்களை காப்பாற்றுவதும் அவர்களது பொருளாதார நலனை அபிவிருத்தி செய்வதும் மிக முக்கியமானதாகும் விவசாயத்துறையில் உள்ள மக்கள் குறிப்பாக கிராமப்பகுதிகளில் சராசரி குடும்பங்களின் மாதவருமானம் மிகக் குறைவாகவே உள்ளது. அதாவது 264/- மாத்திரமே ஆகும். ஆனால் நகர்ப்புற குடும்ப வருமானம் சராசரியாக 453/- வும். இந்நிலையினை நீக்குதற்கும் அதன் மூலம் வருமான ஏற்றத்தாழ்வினை குறைத்து விடுதற்கும் உள்நாட்டு விவசாயத்துறை அபிவிருத்தி வேண்டும்.

G. உள்நாட்டு உற்பத்தித்திறனை பெருக்குவதற்கு விவசாயத்துறையின் உற்பத்தித் துறையினையே முதலில் அதிகரிக்க வேண்டும். இலங்கையின் தேசிய வருமான அதிகரிப்பு கடந்த மூன்று ஆண்டுகளில் 6% இருக்க வேண்டியதற்குப்பதிலாக 3.1% ஆகவே உள்ளது. இதனை தவிர்த்து உற்பத்தித்திறனை பெருக்குவதற்கு முதலில் விவசாயத் துறையின் உற்பத்தித்திறனை அதிகரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். மொத்த தேசிய உற்பத்தியில் ஏறக்குறைய 30% இதிலிருந்து பெறப்படுவதால் இதனை அபிவிருத்தி செய்வதாலேயே தேசிய அபிவிருத்தியை தோற்றுவிக்கலாம்.

இவ்வாறான பல்வேறு காரணங்களினால் தான், விவசாயத்துறை குறிப்பாக உள்நாட்டு விவசாயத்துறை மிக முக்கியமானதாகும். உள்நாட்டில் உணவு நிரம்பல் மிக மோசமான நிலையில் தானிய உற்பத்தியைப் பெருக்குவதற்கு அடிப்படையாக உள்ள உள்நாட்டு விவசாயத்தின் அபிவிருத்தி மிக அவசியமானது. ஒரு மனிதனுக்கு வேண்டிய ஆகக்கூடிய சத்துாட்டம் 2500 கலோரியாக உள்ளபோது இலங்கையில் 1800 கலோரி மாத்திரமே காணப்படுகின்றது. இதனைத் தவிர்ப்பதற்கு உள்நாட்டு விவசாயத்துறை அபிவிருத்தி மிக அவசியமாகும். ஆனால் இத்துறை பலவீனங்களைக் கொண்டுள்ளது. விவசாயிகள் ஏறக்குறைய மொத்தத் தொழிற்படையின் 51% மாகக் காணப்படுகின்றனர் ஆனால் இவர்களில் பெரும்பாலானோர் குத்தகைக்கு நிலம் பெறுவோராகவோ, நாட்கூலக்கு வேலைசெய்யும் குடியானவராகவோ காணப்படுகின்றனர். உழைப்பவனுக்குச் சொத்துடைமை இல்லாத நிலை நியாயமானதாகவே நிலைத்துவிட்டது. வருமானமும் சொத்துடைமையும் மரபுவழி வந்த சிலரின் தனி உரிமையாகவே இருந்தது.

விவசாயக் குடியானவர்கள் உறுதியற்ற வருமானம் பெற்றனர். நுகர்த்தேவைக்கு கடன்பெற்று வந்தனர். பரிதாபத்துக்குள்ளான விவசாயிகள் கடந்த காலங்களில் பொதுவானதாக இருந்திருக்கின்றனர். வருமானக்குறைவு சத்துாட்டக் குறைவும் கொண்ட சொத்துடைமையற்ற கடனாளியாகவுள்ள விவசாயிகளிடம் இருந்த அதிகளவான உற்பத்தித் திறனை எதிர்பார்ப்பதும் சமூக நீதியற்ற எதிர்பார்க்கையுமாகும். இவ் அடிப்படையில் தான் 1970 இன் பிற்பகுதியில் ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கத்தினர் விவசாயிகளை காப்பாற்றுவதிலும், விவசாயத் துறையை ஒழுங்கு படுத்துவதிலும், அக்கறை செலுத்தினர். அவர்களது அக்கறையின் வெளிப்பாடே காணி சீர்திருத்தும் நடவடிக்கையாகும்.

1930 இல் இருந்து காணிச் சீர்திருத்தம் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம், நெற்காணி மசோதா என்பனவற்றின், தொடர்ச்சியாக 1972-இல் 1-ம் இலக்கக் காணிச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்தது. இச்சட்டமும் இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பின்னணி நடவடிக்கைகளும் நிறுவன ரீதியான முயற்சிகளும் மிக முக்கியமானவை. இவை 1975-இல் 39-ம் இலக்கக் காணிச் சீர்திருத்தச் சட்டம்வரை நீண்டுசென்றன உள்நாட்டு விவசாயத்துறையின் புனரமைப்பின் அடிப்படையால் 1972-ம் ஆண்டில் 1-ம் இலக்கக் காணிச் சீர்திருத்தச் சட்டமும் முக்கியமானதாகும். இக்காணிச் சீர்திருத்தச் சட்டம் நெற்காணியாக இருப்பின் 25 ஏக்கரினையும், வெற்றுக்காணியாக இருப்பின் 80 ஏக்கரையும் தனியொருவர் உடைமையாக வரையறுத்தது. இவற்றிற்கு மேலானவை காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டது. தனியார் கூட்டுநிலையங்களுக்கு உரியவிவசாயக் காணிகளும் சீர்திருத்த ஆணைக்குழுவின் கைக்கு மாறின. இதனால் காணி தொடர்பான சிக்கல்கள் நீக்கப்பட்டன. இச் சட்டத்தின்கீழ் பெறப்பட்ட காணிகள் நிலமற்ற விவசாயிகளுக்குப் படிப்படியாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதனால் விவசாயிகள் சொத்துடைமைக்கு உரியவராக மாறியதோடு தமது நிலமென்ற உரிமையின் ஊக்கத்தோடு ஈடுபடவும் வாய்ப்பு ஏற்பட்டது. அத்துடன் விவசாயிகளுக்கு உதவக்கூடியதாக இச் சட்ட நடைமுறை தொடர்பான உற்பத்தி விலைதிறன் சட்டமும் ஆக்கப்பட்டது. சட்டம் பாதுகாப்புடன் வங்கிக்கடன், உர உதவிப்பணம், கமத்தொழில் காப்புறுதி, உத்தரவாத விலைத்திட்டம் போன்ற நடவடிக்கைகளும் நிலம்பெற்ற சிறு விவசாயிகளுக்கு உதவியும் பாதுகாப்பும் உள்ளதாக அமைந்துள்ளன. உழைப்பவனுக்கு உற்பத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக் காரணிகள் சொந்தமாக இருக்கவேண்டுமென்ற நியாயமான தத்துவத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் அவதானம் செலுத்தியிருப்பது வரவேற்கத்தக்கதாகும். சொத்துடைமைகளுக்கு உச்ச எல்லை விதிப்பது என்ற நடவடிக்கை மறுபுறத்தில் சிறு விவசாயிகளை நிலப்பிரபுக்களின் பிடியிலிருந்து விடுவிக்கவும் உதவுவதாக உள்ளது. கிராமிய வங்கிகளின் அதிகரிப்பும் நெகிழ்ச்சி உடைய கடன் கொள்கைகளும் விவசாயியின் நிதி தேவை கருதி முன்னைய முதலாளிகளின் கால்களில் விழுந்து விடாது பாதுகாப்பு அளிப்பதாக உள்ளனர். எனினும் காணி சீர்திருத்த மூலமாக தமது சமூக பொருளாதார அந்தஸ்தினை எதிர் நோக்கும் அறிவுறுத்தல்களை உயர்வகுப்பு குடும்பத்தினர் பல்வேறு நடவடிக்கைமூலம் முறியடிக்கின்றனர் என்பதனை பல ஆய்வுகள் காட்டுகின்றன என விவசாயத்துறை ஆராய்ச்சியாளர் R.D. வணிகரெத்தின கூறுகிறார். எனினும் சொத்துடைமை வாதிகள் உடனடியாக அதனை இழக்க தயாராக இருக்கமாட்டார்கள் என்பதையும் அரசாங்கம் நன்கு உணரும். ஆதலால் இது தொடர்பான பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து கையாளும் இந்நடவடிக்கைகள் நீண்டகாலத்தில் தொடர்ச்சியாக ஒழுங்காக பாரபட்சமற்ற முறையில் மேற்கொள்ளப்படுமாயின் எதிர்காலத்தில் இலங்கையின் நிலவுடைமை முறைமாற்றம் பெறவும் விவசாயக் குடியானவர்கள் பாதுகாக்கவும் வாய்ப்பு ஏற்படும். அப்போது உள்நாட்டு உற்பத்தித்துறையின் பெருக்கம் நிச்சயமாக ஏற்படும். அதுவே உழைப்பவனையும், வறியவர்களையும் காப்பாற்றுவதற்கான எதிர்கால அரசியல் சமூக நலன் நடவடிக்கையாகும்.

இ. நகுலன்.
*G.C.E. (A/L) 12C*

*****

# இலங்கையின் பொருளாதார அமைப்பு

எமது நாட்டின் தேசிய உற்பத்தியை கொண்டு நோக்கும் போது அதன் உற்பத்தியில் பெரும் பங்கு விவசாயத்தில் தங்கியிருப்பதால் அதனை ஒரு விவசாய பொருளாதாரம் என கூறலாம். இவ் விவசாய பொருளாதாரம் பின் தங்கிய – அபிவிருத்தியடைந்து வரும் போக்கைக் கொண்டதாக காணப்படுகின்றது அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் நமது நாட்டை ஒப்பிடும் பொழுது அபிவிருத்தி குன்றிய நாடாகக் கருதப்படுகின்றது. அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளுடன் எமது நாட்டை ஒப்பிடும் பொழுது இதன் தலா வருமானம் மிகக் குறைந்ததாக காணப்படுகின்றது. எனவே எமது நாடு ஒரு பின் தங்கிய நாடாக கருதப்படுவதற்கு இதன் தலா வருமான விகிதம் முக்கிய காரணியாக விளங்குகின்றது. இதனைவிட நிலம், மூலதனம், உழைப்பு என்பன காணப்பட்டு அவற்றைப் பயன்படுத்தும் ஆற்றல் இல்லாமையினாலும் எமது நாடு பின் தங்கியுள்ளது. எடுத்துக்காட்டாக உழைக்கக்கூடிய வர்க்கங்களில் ஏறத்தாழ $5\frac{1}{2}$ இலட்சம் மக்கள் வேலை அற்றவர்களாக காணப்படுகின்றார்கள். உழைப்பு மாத்திரம் அன்றி எத்தனையோ மூலவளங்கள் பயன் படுத்தாமல் சோம்பிக் கிடப்பதினாலும் நமது பொருளாதாரம் பின் தங்கியுள்ளது. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மொத்த தேசிய உற்பத்தியில் பெரும் பங்கை வகிப்பது கைத்தொழிலாகவும் சிறு பங்கை வகிப்பது விவசாயத்துறையாகவும் அமைகிறது. நமது நாட்டு மொத்த உற்பத்தியின் 1972-ம் ஆண்டு புள்ளி விபரப்படி கைத்தொழிலின் பங்கு 19.7% ஆகும். ஆகவே எமது கைத்தொழில் துறை பின் தங்கியிருப்பதால் அபிவிருத்தி குன்றிய பொருளாதாரம் எனவும் அழைக்கப்படுகின்றது ஆனால் 1975-ம் ஆண்டில் கைத்தொழில் உற்பத்தி கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இதற்கு இன்றைய அரசின் ஊக்கம்என்றே நாம் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது நாட்டு விவசாயப் பொருளாதாரத்தை ஏற்றுமதி விவசாயம், உள் நாட்டு விவசாயம் என பகுப்பார்கள். இதில் ஏற்றுமதி விவசாயம் அபிவிருத்தி அடைந்ததாகவும், உள் நாட்டு விவசாயம் அபிவிருத்தி குறைந்த துறையாகவும் எமது பொருளாதாரத்தில் அமைந்துள்ளது. ஏற்றுமதி விவசாயப் பொருட்களான தேயிலை, இறப்பர் போன்ற பெருந்தோட்டப் பயிர்கள் மூலம் நமது தேசிய வருமானம் ⅓பகுதியை பெறுகின்றது. எமது ஏற்றுமதிப் பொருட்கள் விவசாயப் பொருட்களாக இருப்பதினல் காலநிலை மாறுதலுக்கேற்ப அதன் நிரம்பலும் பாதிக்கப்படுகின்றது. அது மாத்திரமன்றி உலக சந்தையில் அப் பொருளின் வருவாயும் பாதிக்கப்படுகின்றது. இதனல் எமது ஏற்றுமதித் துறையில் மாற்றம் ஏற்பட்டு பல விளைவுகளை உண்டு பண்ணுகின்றன. நெல், உப உணவுப் பொருட்களைக் கொண்ட உள் நாட்டு விவசாயத்தை நோக்குவோமானல் நமது நாடு ஒரு விவசாய நாடாக இருந்த போதிலும் எமக்குத்தேவையான உணவுப் பொருட்களை பிற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டி இருக்கிறது. அதற்கு காரணம் விவசாயம் அபிவிருத்தி அடையாமையும், அத்துறைக்கு மக்கள் ஈடுபட முன் வாராமையும் ஆகும். 1972-ம் ஆண்டு புள்ளி விபரப்படி இலங்கை தனது இறக்குமதியில் 47% உணவுப் பொருட்களை இறக்குமதி செய்தது. 1973-ம் ஆண்டில் அரிசி, மா இறக்குமதிக்கு 77.2 கோடி ரூபாவும் 1974-இல் இறக்குமதி கட்டுப்படுத்தியும் 210.4 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. எமது நெல் உற்பத்தியானது போதியளவு கிடைக்காமைக்குக் காரணம் ஊக்கமின்மை, காணியின்மை, நீர்ப்பாசன வசதியின்மை போன்றவைகளுடன் பெருகிவரும் சனத்தொகையுமாகும். எனவே உள் நாட்டு விவசாயத்துறையில் சுய தேவையை பூர்த்தி செய்யாத நிலையில் பிற நாடுகளை நம்பி வாழ வேண்டி இருக்கிறது. இதனல் நம் பொருளாதாரம் பின் தங்கிய பொருளாதாரம் எனக்கூறப்படுகின்றது.

நமது பொருளாதாரத்தில் இன்னேர் குறைபாடு, கைத்தொழில்துறை பின் தங்கியிருப்பதாகும். மொத்த தேசிய உற்பத்தியில் அதன் பங்கு 19%. நவீன சாதனங்களைக் கொண்டு சிறந்த முறையில் கைத்தொழில் அபிவிருத்தி அடைதல் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணியாகும். ஆனல் இலங்கையில் அத்தகைய வாய்ப்பு இல்லை எனலாம். ஏனெனில் இந்நாடு ஒரு விவசாய நாடாக அமைவதினலாகும். கைத்தொழில் இயங்குவதற்குரிய தொழில் நுட்பங்களும், மூலவள ஆராய்ச்சிகளும், சந்தை அமைப்புக்களும், சேமிப்பும், அரிதாகவே உள்ளது. கைத்தொழில், விவசாயம் என்பவற்றைவிட சேவைகள் கூடிய பங்கை வகிக்கின்றன. சேவைகள் என்னும் போது வர்த்தகம், அரசாங்க பணிகள், வீடமைப்பு, மின்சாரம் போன்றவையாகும். விவசாயம் கைத்தொழில் போதிய வேலை வாய்ப்பை கொடுக்காமையினல் சேவைகள் அதற்குரிய இடத்தை அளிக்கிறது.

எனவே இலங்கையின் பொருளாதாரம் பின் தங்கிய பொருளாதாரம் என்பதற்குத் தளம்பலுள்ள ஏற்றுமதி விவசாயம், தன்னிறைவு அற்ற உற்பத்தி, அபிவிருத்தி குன்றிய கைத்தொழில் துறை என்பன காரணங்களாகும். இக் காரணியின் அடிப்படையில் எமது பொருளாதாரத்தினை சீரழியச் செய்யும் காரணி மிக வேகமாகப் பெருகிவரும் சனத்தொகையாகும். இன்றைய இலங்கையின் சனத்தொகையில் 41% மக்கள் 14 வயதுக்குட்பட்டவராக இருக்கின்றனர். இவர்கள் உழைப்பில் ஈடுபடமுடியாமல் இருக்கின்றார்கள். உழைக்கும் வர்க்கத்தினர் குறைவாகக் காணப்படுகின்றார்கள். இச் சனத்தொகை அதிகரிப்புக்குக் காரணம் இறப்பு வீதம் குறைவாக இருத்தலும், சிறந்த சுகாதார வசதியும் என்றே கூறலாம். இவ் அதிகரிப்புகள் நாட்டின் சேமிப்புக்கு முற்றுப் புள்ளி வைக்கின்றன இதனல் முதலீடு தடைப்பட்டு உற்பத்தி பாதிக்கப்படுகின்றன. எனவே இலங்கையின் பொருளாதாரம் மேற் காட்டிய அம்சங்களில் இருந்து அபிவிருத்தி குறைகிறது என்பதையும் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கிய பொருளாதாரம் என்பதையும் அறிந்து கொள்ளக்கூடியதாய் உளது. இந் நிலைமைகளைப் போக்க இன்றைய அரசாங்கம் பல பொருளாதார செயற் திட்டங்களை தீட்டி வளம்படுத்த முனைந்து கொண்டிருக்கிறது.

தி. தவராஜா,
G.C.E.(A/L) வர்த்தக பிரிவு 12E
1-ம் வருடம்.

*****

# உழவுத் தொழிலின் உயர்வு

வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

என்பது வள்ளுவர் வாக்கு. உலகிற்கே வாழும் வகையாதெனத் தெளிவுற எடுத்துக்காட்டிய வள்ளுவன் வாழ்வாங்கு வாழ்தல் எனக் குறிப்பிட்ட வாழ்க்கை யாதெனில் நிலையிற்றுளாமை வாழ்தலாகும் நிலையிற்றுளாமையாவது மானத்தை இழக்காது சுயமரியாதையுடன் வாழ்தல். வாழ்க்கை என்பது உண்டுடுத்து மகிழ்வது மட்டுமன்று. சுயமரியாதையை மானத்தை இழக்காது வாழ்வதே வாழ்க்கை. இத்தகைய வாழ்க்கைக்கு அச்சாணியாக விளங்குவது உழவுத் தொழில் ஒன்றே. உழவு தவிர்ந்த ஏனைய தொழில்கள் சுயமரியாதையை இழந்து செய்யும் தொழில்களேயாகும், எனவே தான்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்-மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்.

என்றார் வள்ளுவர்.

உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லைக் கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

என்றார் ஔவையார்.

'தொழுதூண் சுவையில் உழுதூண் இனிது' என்பது மூதுரை. இவற்றால் உழவுத் தொழில் சிறந்த தொழில் என்பதும், அதன் மூலமே வையத்து வாழ்வாங்கு வாழ முடியும் என்பதும் நன்கு பெறப்படும். பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு,

'நீர்நிலை பெருகத் தட்டோர் இவண் தட்டாரே [தள்ளாதோர்
இவண் தள்ளா தோரே' என உழவின் சிறப்பினை எடுத்துரைத்து அறிவுறித்தினார் குடப்புலவியனார்.

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலில் [அந்நிலையே
கெட்டான் எனப்படுத்தல் நன்று.

என மானத்தின் இன்றியமையாமையை வலியுறுத்தினார் வள்ளுவர். உயிரினும் மானமே சிறந்தது. இதனை உணர்ந்த நம் முன்னோர் தன்மானத்தைக்காக்கும் உழவுத் தொழிலைப் போற்றினர். உழவினைப் போற்றிடும் பொன்னாளாகப் பொங்கல் திருநாளைக் கொண்டாடினர். ஆனால் இன்று நிலை வேறு சுதந்திரமாக வாழ்ந்த நாம் அந்நியருக்கு அடிமைகளானோம். அடிமை வாழ்வு நம் மானவுணர்ச்சியைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டது. அடிமை மனப்பான்மை நம்முடலோடு இரண்டறக்கலந்து விட்டது அதன் விளைவாய் உழவின் சிறப்பினை மறந்தோம். அரசாங்க உத்தியோகத்தின் மீது நாட்டம் கொண்டோம். கோழி மேய்த்தாலும் அரசாங்க உத்தியோகம் வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. அரசாங்க உத்தியோகம் என்ற மோகம் வேகமாக வளர, அதனால் உழவுத்தொழில் குன்றியது. கழனிகள் எல்லாம் காடுகளாயின. முன்னோர் பாடுபட்டு ஆக்கிவைத்த குளங்கள் எல்லாம் பாழடைந்தன. நாம் உணவுக்காக வெளிநாடுகளை நோக்கி நிற்கும் நிலை உருவாயிற்று.

சமுதாயத்தில் உழவுத் தொழில் தாழ்ந்தவொரு தொழில் என்ற எண்ணம் தோன்றியது. உழவனைச் சமுதாயம் தாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

373
KOK
AR

வாகக் கருதிற்று. மாதம் ஆயிரம் ரூபா வருமானம் பெற்றாலும் உழவனுக்கு சமூகத்தில் இடமில்லை. ஆனால் ஐம்பது ரூபா சம்பளம் பெற்றாலும் அரசாங்க சேவையில் அமர்ந்தோனுக்கு சமூகம் பெருமதிப்பளித்தது. உழவனை மணம் முடிக்க மங்கையர் தயங்கினர். அடிமைத்தனத்தின் விளைவு இது. இதனால் உழவுத் தொழில் செய்ய எவருமே முன்வரத் தயங்கினர். படித்தவர்கள் எல்லோரும் அரசாங்க வேலை கிடையாதபோது சும்மா இருந்தனரேயன்றி உழவுத்தொழிலில் ஈடுபடவில்லை. அவ்வளவுக்கு உழவுத்தொழில் சமுதாயத்தில் தாழ்வுற்று இருந்தது. இதனால் நாட்டில் வேலையற்றோர் தொகை பெருகியது

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' 'தொழுதூண் சுவையில் உழுதூண் இனிது' 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகு' என்ற பொன் மொழிகள் எல்லாம் ஏட்டளவிலே கிடந்தன. உழவனால் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகம் அவனை ஒதுக்கியது போலிக் கௌரவம் தலைவிரித்து ஆடியது.

உணவு நெருக்கடி எங்கிருந்தோ வந்தது. பட்டினிச்சாவு எம்மைப் பயமுறுத்தியது வேலையில்லாப் பிரச்சினை மூர்க்கமாகத் தாக்கியது. உயிர்வாழ வேண்டுமானால் உணவு வேண்டும் அதை வெளிநாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ள எம்மிடம் பணமோ இல்லை. உயிரைக்காக்க உழவைத் தவிர வேறுவழியில்லை கால்சட்டை மோகம் கலைவலாயிற்று 'உழவே, நீயேகதி, நீயில்லாவிட்டால் உயிர் வாழ்க்கை தானேது' என்ற நிலை உண்டானதால் இன்று உழவுத் தொழிலில் எல்லோருமே போட்டி போடுகிறனர். உத்தியோகம் கூடப்பெற்றுவிடலாம், ஆனால் உழவுத் தொழிலுக்குக் காணி பெறுவது கடினம் என்ற நிலை இப்பொழுது உண்டாகியிருக்கிறது. சமுதாயத்திலும் உழவன் போற்றப்படும் நிலை ஏற்றப்பட்டுள்ளது ஒதுக்கப்பட்ட உழவன் இன்று உயர்த்தப்படுகிறான். எங்கு நோக்கினும் உழவன்சிறப்பே பேசப்படுகின்றது. காலம் கடந்த புத்துணர்வு ஆயினும் வரவேற்க வேண்டிய திருப்பம் இது.

'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகு' என்றான் வள்ளுவன். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அவன் கூறிய பொன்மொழி இன்று மெய் மொழியாகத் திகழ்கின்றது.

காடுகளெல்லாம் பொன் கொழிக்கும் கழனிகளாகக் காட்சியளிக்கின்றன. 'ஆற்றம் கரையின் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே ஏற்றம் உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லைக் கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு' என்ற ஔவையின் பொன் மொழி இன்று மெய் மொழியாக உழவின் சிறப்பு அரசினாலேயே பறை சாற்றப்படுகின்றது. ஏடுகள் யாவும் உழவின் சிறப்பினை — அதன் அவசியத்தினை வலியுறுத்துகின்றன. உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்பதே இன்று தாரக மந்திரமாகிவிட்டது.

இக்காலத்து உழவர்களின் நிலையை நினைந்து நினைந்து மகிழ்ச்சியடைய வேண்டியுள்ளது. இன்று செல்வத்தின் எல்லையைக் காண வேண்டுமானால், எதிர்காலத்தைப் பற்றி கவலை இல்லாமல், சேர்த்து வைக்கும் சிக்கனம் இல்லாமல், பிறருக்கு உதவி செய்யும் தன்மையைக் காணவேண்டுமானால், சுரண்டுவோரின் திறமை செல்லாத இடத்தைக் காணவேண்டுமானால், உழவர்களின் வாழ்வையே காணவேண்டும்.

நித்திலம் கொழிக்கும் ஈழத்திருநாட்டின் பொருளாதாரத்துக்கு ஜீவநாடியாக இருப்பது உழவுத்தொழிலே. நாட்டின் பொருளாதாரம் உயர்ந்தால் தான் மக்களிடையே உள்ள பசி, பிணி, பகை வேறுபாட்டுணர்ச்சி முதலியன எல்லாம் நீங்கும். அத்துடன் பிற நாடுகளுடன் சரிநிகர் சமானமாகத் தலை நிமிர்ந்து வாழமுடியும்.

உழவுத் தொழிலே சிறந்த தொழில் என்று ஏட்டிலே படித்தோம். இன்று அதுவே சிறந்த தொழில் என்று நாட்டிலே கண்டோம். அடிமை நிலை அகன்றது. அடிமை மோகமும் அகன்றது. எங்கும் பசுமைப்புரட்சி. உழவுத்தொழிலைப் போற்றி பெருநலம் பெறும் நிலையிற்றாழாது மானம் காத்து வையத்து வாழ்வாங்கு வாழ்வோமாக.

வாழ்க உழவுத் தொழில்!
வளர்க அதன் உயர்வு!

ஐ. மகேஸ்வரன்.
க. பொ. த. ப. (உயர்தரம்)
விஞ்ஞானப் பிரிவு —2-ம் வருடம்.



249955
ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "நீதியதோ"!

[1]

நடப்பதற்கோ நாதியற்று நடைப்பிணமாய்த் தள்ளாடி
இடர்ப்பட்ட குலமொன்றை இங்கொதுக்கி வைத்ததனை
அடித்துதைத்து வதைக்கின்ற அநியாயம் புரிவோடு
குடிப்பெரியர் குதூகலித்து வாழ்வதுதான் அறமுறையோ!

[2]

கல்யாண வீடென்றும் களியாட்ட விழாவென்றும்
சொல்லியுறவினர்க்கு சோறிட்டு கொண்டாட
சொல்லாமல் செல்லுகின்ற கொடும் வறுமை தின்போரை
நில்லங்கே எனத்தடுத்து நிறுத்துவதும் நீதியதோ!

[3]

நிறை தவந்தான் செய்தும் நிலைபேறு இங்கின்றி
வறுமை குடிகொள் மண்குடிசை வாழ் பெண்ணை
சிறைபிடிக்க வேண்டின் சீதனம் தாவெனக் கேட்டு
குறைவற்ற குபேரர் விலைபேசல் நீதியதோ!

[4]

முடங்கி வெயில்வீதியிலே முனகல் ஒலியெழுப்பி
கிடையாதோ எனச் சதம்கேட்டுக் கிடந்துழல
விடுக்கெனவே நடந்தப்பால் வீதியோரக் கோயில் முன்
உடைக்கரிதாம் உண்டியலின் உள்ளிடுதல் நீதியதோ!

[5]

அதிகாலை எழுந்தமுதல் அடுப்பூதும் பெண்களெல்லாம்
பதமாகப் படைக்கின்ற பட்சணத்தால் ருசி பெருக்க
இதுக்கேன்ரி உப்பில்லை என்றிரைந்து கணவன் மார்
எதையேனும் எடுத்து அடி கொடுப்பதுவும் நீதியதோ!

[6]

வியர்வை பரவமேனி வேதனைக ளேதுமின்றி
துயர் மறந்து தனைமறந்து துடிப்புடனே வேலை செய்து
அயர்ந்திடுவார் மனையேகி அரைவயிற்றுப் பசி பிடுங்க
முயல்வார்யார் இவர்க்குதவ முயலாமை நீதியதோ!

[7]

நித்திரை விட்டெழுந்து நிதம் வேலை செய்கின்ற
எத்தனையோ ஏழை மக்கள் எழில்மிகு வாழ்வொடுங்கி
செத்திடும் நாள்வரின் செய்யும் பணி பல கொள்வேன்
இத்தனைக்கும் என்னையே நீ! பலியிடுவாய் நீதியதே!

வ. க. பரமநாதன்.
விஞ்ஞான பிரிவு
இரண்டாம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய மற்ற எரிபொருட்கள்

இந்த உலகத்தையே ஆட்டுவிக்கும் ஒரு பூதகரமான பிரச்சினையாக எரிபொருட் தட்டுப்பாடு தலைதூக்கியுள்ளது. எம்மைப் போன்ற அபிவிருத்தி அடைந்து கொண்டு வரும் நாடுகளுக்கு மட்டும் இந்தப் பிரச்சினை உண்டென்று நாம் நினைத்துவிடலாகாது: எவ்வளவோ முன்னேற்ற மடைந்த நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா போன்ற நாடுகளே எரிபொருட்தட்டுப்பாட்டால் நிலைகுலைந்து இருக்கும் போது எமது நிலை என்ன? ரஷ்யாவில் ஓடும் கார்களையெல்லாம் பெற்ரோல் இல்லையென்றவுடன் பூட்டி வைத்திருப்பதா? இல்லை அமெரிக்காவிலுள்ள தொழிற்சாலைகளையெல்லாம் பெற்ரோல் இல்லையென்றவுடன் நிறுத்திவிடுவதா? இதற்கும் ஒரு முடிவு காணத்தானே வேண்டும்.

நமது பாரம்பரிய எரிபொருட்களான பெற்ரோல், மண்ணெண்ணெய், டீசல் போன்றவற்றை நாம் இனிமேலும் நம்பிக்கொண்டிருக்க முடியாது. ஏனெனில் அவை நீரூற்றைப் போலத் தோண்டத் தோண்ட ஊறிக் கொண்டு வருபவை அல்ல. அவற்றிற்கும் ஒரு எல்லை உண்டு அவற்றையும் நாம் 65 அல்லது 10 வருடங்களுக்கே பெறலாம். பெற்ரோலிலேயே தமது முன்னேற்றத்தைக் தாங்கிக்கொண்டிருக்கும் முன்னேற்றமடைந்த நாடுகள் இடி விழுந்தாற்போலக் கலங்கிக் கொண்டிருக்கின்றன. மத்திய கிழக்கு நாடுகளின் கைக்குப் பெற்ரோல் வியாபாரம் வந்தவுடன் பெற்ரோலின் விலை அதிகரித்து விட்டது. பெற்ரோலுக்கு முடிவுகாலம் நெருங்கிவிட்டால் இந்த உலகுக்கே முடிவுகாலம் வந்துவிடும். இந்த உலகமே ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றுவிடும். பெற்ரோலும் இல்லையென்று ஆகிவிட்டால் அணுசக்தியைப் பயன்படுத்தலாம் என்றே உலகநாடுகள் எல்லாம் எண்ணியிருந்தன. ஆனால் ஒரு அணுசக்தி நிலையத்தை ஸ்தாபிப்பதற்கு பெருமளவு பணம் தேவைப்படும். ஆகவே எம்மைப் போன்ற முன்னேறிக் கொண்டு வரும் நாடுகளிடம் அத்தகைய பணவசதியில்லை. அத்துடன் அணுக்கழிவை நாம் எத்தகைய பாதுகாப்பாகத் தேக்கி வைத்திருந்தாலும் அதன் விளைவுகள் 2000 வருடங்களுக்கு தொடர்ந்தும் இருந்து கொண்டேயிருக்கும். இத்தகைய காரணங்களால் நாம் மலைபோல் நம்பியிருந்த அணுசக்தியையும் கைவிடவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

நமது பாரம்பரிய எரிபொருட்களான பெற்ரோல், மண்ணெண்ணெய் டீசல்போன்றவற்றைக் கைவிடவேண்டிய நிலையில் இருக்கும் போது நாம் வேறு வகையான எரிபொருளைக் கண்டுபிடிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இந் நேரத்தில் நமது அண்டை நாடான இந்தியாவில் மாட்டினது சாணத்திலிருந்து மீதேன் என்கின்ற வாயுவைப் பெற்று அதனை நாம் எரிப்பதற்குப் பயன்படுத்தலாம். என்பதைக் காட்டியுள்ளார்கள். 2 : 1 என்ற விகிதத்திலே நீரையும் சாணத்தையும் கலந்து வைத்தால் நுண் அங்கிகளின் காற்றின்றிய சுவாசத்தின்போது மீதேன் வாயு வெளிவருகிறது. இவ்வாயுவுக்கு ஒரு வகையான மணமோ அல்லது கிருமிகளைக் கொண்டிருக்கும் தன்மையோ இல்லை. இது மற்ற எரிபொருட்களை விடக் கூடிய வெப்பத்தினையும் கொடுக்கக்கூடியது வாயுவை எடுத்த பின்பு மிஞ்சும் சாணத்தை நாம் உயர்ந்த தரமான பசளையாகப் பாவிக்கலாம். 15 கன அடி வாயு 5 பேர் உள்ள குடும்பத்திற்குப் போதுமானதாகும்.

இவ்வாயு இன்னும் சமூகத்தில் அறிமுகப்படுத்தப்படவில்லை. பெற்ரோலைக் கைவிடவேண்டிய நிலையில் இருக்கும் நாம் மிகவும் வேகமாய் முன்னேறிவரும் இவ்வாயுவை இனிமேல் பயன்படுத்தலாம். இதற்கு எல்லையே இல்லை. மாடு எக்காலம் வரை இருக்குமோ அக்காலம் வரை நாம் இதனைப் பயன்படுத்தலாம். ஆகவே இதனை நாம் சமூகத்திற்கு அறிமுகப்படுத்தினால் இதற்குப் பூரண ஆதரவு கிடைக்குமென்பதில் ஐயமேஇல்லை.

க. அகிலா
*10 A*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலவிதமான கண்கள்

"எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்." "கண்ணுடையோர் என்போர் கற்றோர்; முகத்திரண்டு புண்ணுடையோர் கல்லாதவர்." "எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு" என்று கல்வியைக் கண்ணுக்கு ஒப்பிட்டார் சான்றோர். நமது முன்னோர்கள் ஐம்புலன்களில் கண்ணுடன்தான் கல்வியை ஒப்பிட்டார்கள். எனவே நாம் மட்டுமல்ல, விஞ்ஞானிகள் மட்டுமல்ல, நமது முன்னோர்கள் கூட ஐம்புலன்களில் கட்புலனே சிறந்தது என்று கூறுகின்றார்கள். அப்படி சிறப்பு வாய்ந்த கண்புலன் வெவ்வேறு விலங்குகளில் வெவ்வேறு விதமாக தொழிற்படும்.

நாம் ஒரு பொருளைப் பார்ப்பதுபோல் மற்ற மிருகங்களும் அதைப் பார்ப்பதில்லை. அவை பல பல விலங்குகளில் பல்வேறு வகைப்படும். அவற்றின் பார்வையானது அவற்றின் மணத்திலும், கேட்டலிலும் தங்கியுண்டு. உதாரணமாக அத்தர் என்ற ஒரு வகை பூச்சியின் மணத்தைக் கொண்டு அதை ஒரு விலங்கு வேட்டையாடுகின்றது. அவ் அத்தரின் எதிரிக்கு கண் பார்வையில்லை. எனவே பூச்சியின் மணம் அதனை தூண்டிவிடுவதனால் அது வேட்டையாட உதவும். எனவே இங்கு அத்தரின் எதிரி மணத்தின்மூலமே பார்வையை பெறுகின்றது எனலாம். வேட்டையாடும் நாய்கள் முயல்போன்ற மிருகங்களை பிடிப்பது பார்வையால் அன்று மணத்தினால் அல்லவா?

அடுத்து Pestrel என்ற ஒரு வகை பறவை மிக உயரத்தில் சிறகடித்து பறந்து கொண்டிருக்கும். அதே நேரத்தில் அது தன்னுடைய தொலைநோக்கு கண்ணினால் வண்டுகளை புதருக்கடியில் கண்டுவிடும். உடனே இடிவிழுவதுபோல் வந்து இரையைப் பிடித்துவிடும். அப்படி அது கீழே வரும்போது Pestrel கண்தொலைநோக்கு பார்வை மாறி இப்போ சிறிய பொருட்களையும் உருப்பெருக்கி அது பார்க்கின்றது. இது ஒரு விந்தையான பார்வைதானே.

சாதாரணமாக தெருவில் அடிபட்டுக் கிடக்கும் பறவைகளின் பார்வை, தூரவரும் பொருளையும், அதன் வேகத்தையும் சரியாக கணிக்க முடியாததினால் அது அடிபட்டு இறக்கக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் ஆந்தை, கழுகு போன்றவைகளின் பார்வை பொருள் கிட்டவரும்போது அவை சரியாக பொருளை பார்க்கவும், அதன் வேகத்தை சரியாக கணிக்கக் கூடியதாகவும் இருக்கும். அமெரிக்காவில் சிலவகை மீன்கள் இரட்டைப் பார்வை கண் உடையவை அவற்றின் கண் மேற்பகுதி, கீழ்ப்பகுதி என பிரிக்கப்படும். மீன் நீரில் நீந்தும்போது கண்ணின் மேற்பகுதி வெளியில் உள்ளவற்றையும் கண்ணின் கீழ்ப்பகுதி நீரில் உள்ளவற்றையும் ஒரே நேரத்தில் பார்த்தறியக் கூடியதாயுண்டு.

பூச்சிகளின் கண்கள் கூட்டுகண்கள். ஒவ்வொரு கண்ணும் பல ஆயிரம் வில்லைகளினால் ஆக்கப்பட்டன. ஒவ்வொரு வில்லையிலும் விம்பத்தை பெறக்கூடியது. எனவே பூச்சிகள் பல எண்ணிக்கை உடைய பொருட்களின் விம்பத்தை கண்ணில் தோற்றுவிக்கும் என எண்ணக்கூடாது. நாம் ஒரு பொருளை இரண்டு கண்களால் பார்க்கிறோம். ஆனால் ஒரே ஒரு விம்பம்தான் மூளையினால் பதிவு செய்யப்படுகின்றது. இதேபோலத்தான் பூச்சிகளிலும் ஒரே ஒரு விம்பமே மூளையினால் பதிவு செய்யப்படும்.

இவ்வாறு உலகில் தோன்றிய உயிரினங்களின் கண்கள் பல்வேறு விதமானவை.

த. மகாலக்ஷ்மி
*8 B*

எமது நன்றி

கண்பார்வைக் குறைவான மாணவர் ஒருவருக்கு யாழ். றொற்றறிச் சங்கத்தார் மூக்குக் கண்ணாடி ஒன்றை வழங்கியுள்ளது. இச்சங்கத்தாருக்கு எமது நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் ஒரு நோக்கு

இப்பூவுலகு ஓர் ஆழ் கடலானால் அதில் ஆடிச் செல்லும் ஓடந் தான் வாழ்க்கை ஓடக்காரன் அறிவு அவன் கையிலிருக்கும் துடுப்பே கல்வி. அவ்வோடத்திற் பயணஞ் செய்யும் பிரயாணிகள் தான் நாம். துடுப்பில்லாமல் ஓடத்தைக் கரை சேர்க்கமுடியாது. அது போல கல்வி இல்லாமல் வாழ்க்கையை முறையாக (செலுத்தல்) வகுக்க இயலாது. துடுப்பை இழந்த ஓடம், பாறைகளுடன் முட்டி மோதி நொருங்க நேரிடுவது போல கல்வியென்ற துடுப்பை இழந்த வாழ்க்கை ஓடமும் வறுமை, அறியாமை, துன்பம் ஆகிய பாறைகளுடன் மோதுண்டு உருக்குலைய நேரிடும். கல்வி என்பது கலைகளின் கடாட்சம் அதைக்குறைவின்றிப் பெற்றவன் அடைவான் மோட்சம்.

தெரியாததொன்றைத் தெரிந்துகொள்ளலே கல்வி. கற்றபின் அவற்றைக் கௌவி காலங் கழித்தலே கடமை. அதுவேதான் மாணவர்தம் உடைமை. இதையே வள்ளுவப் பெருந்தகையும் "கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்றார் தம் திருக்குறளில். படிப்பென்றால் அது பண்பு. பண்பென்றால் அது படிப்பு.பண்பில்லாப் படிப்புஏன்? அதன் எத்தகைய பிடிப்பு வந்தாலும் அவையெல்லாம் வீண்.கல்வி கற்பது கர்வம்கொள்ளவா? அல்ல.எதற்கும் காரணம்கண்டு வாழ. மாதா பிதா குரு தெய்வம் என்றனர் ஆன்றோர். ஆனால் இன்றோ அவர்கள் யார் என்கிறார்கள் மாணவர். படிப்பு மரமானால் அங்கு பண்பு தான் நிலம்-நிலமில்லாமல் ஒரு பயிரா? பண்பில்லாமல் ஒரு படிப்பா? மூத்தோர் சமயம் சட்டம் இவை மூன்றும் மதிப்புக்குரியவை. இன்று மாணவர் இம்மூன்றையும் மதிப்பதே இல்லை. "அகரம்" தெரிந்ததும் அகங்காரத்தின் சிகரத்துக்கே சென்றுவிடுகின்றனர் சிலர்.

மேலும் விஞ்ஞானம் கற்கும் இக்கால மாணவரிடையே மெய்ஞ்ஞான அறிவைக் காண்பது மெத்தக் குறைவு. கடவுளா? அவர் யார்? எங்கிருக்கிறார்? என்றெல்லாம் வினவுகின்றார்கள். வித் + ஞானம் = விஞ்ஞானம், மெய் + ஞானம் = மெய்ஞ்ஞானம் (உண்மை ஞானம்) என்ற மெய் ஏனோ அவர்களுக்குப் பொய்யாகிப் போய் விடுகிறது. மனித சக்திதான் இம்மானிலத்தில் மாபெரும் சக்தியென்று மார்தட்டிக் கொள்ளுகிறார்கள். ஆனால் மனித சக்திக்கும் அப்பாற்பட்ட தெய்வசக்தி உண்டென்பது ஏனோ அவர்களுக்குத் தெரியாமற் போய் விடுகின்றது. கல்வியின் பயன் கடவுளைத் தொழுதலே. இதைக் கடைப்பிடிக்க வேண்டும் மாணவர் சமுதாயம்.

பெண்களைப் பொறுத்த வரையில் கல்வி கற்பது ஒரு நாகரீகச் சின்னமாகத் திகழ்கின்றது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நாற்குணங்கள் நான்கும் தற்போதைய நங்கையரிடத்தில் நாம் காண்பதில்லை. அச்சம் அவர்களிடத்தில் குடிகொள்ள அச்சப்படுகின்றது. ஏன்? தாம் அறிவு பெற்றுவிட்டோம் என்ற ஆணவத்தால். மடம்; இது மங்கையரிடத்தில் மதிப்பே இல்லை. ஏனென்றால் கல்வி கற்றுவிட்டோம் என்ற மமதைக் குறிப்பே காரணம். நாணம்; அதை அவர்கள் யாருக்கோ தானம் பண்ணி விட்டார்கள் போலும்! பயிர்ப்பா? பாவையரிடத்தில் அதற்கு உயிர்ப்பே இல்லை. கல் என்றாலும் கணவன் புல் என்றாலும் புருஷன் என்று வாழ்ந்த பெண்கள் கல்வியிலும் கழிவாகக் கணவன்மாரைக் கருதுகின்றார்கள். இது மறைய வேண்டும். மாற வேண்டும்.

ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்பார்கள். புத்தகம் புவிக்குதவாது. இக்கால இளைஞர்கள் இருந்தெழுதிப் பிழைப்பதையே உயர்வெனக் கருதிக் காலம் கழிக்கின்றார்கள். உடல்வருந்தி உழைப்பதைக் கண்டு ஏன்தான் இழிக்கின்றார்கள். எல்லாவற்றிற்கும் மூலம் கல்வி. கல்வி என்றவுடன் தான் களவானக வேண்டுமென்ற நினைப்பு. பொறியியலாளராக வேண்டும் பட்டம் பெற வேண்டும். படாடோபமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ வேண்டும் என்ற பகற்கனவு! ஆனால் பாடுபட்டு உழைக்கும் பாட்டாளி வர்க்கத்தை, வியர்வை சிந்த வயற்காட்டில் வதங்கும் விவசாயியை இவர்கள் நினைத்ததுண்டா? ஒரு வீட்டிற்கு ஆதாரம் தாரம், ஒரு நாட்டிற்கு ஆதாரம் பொருளாதாரம். பொருளாதாரம் பெருக உணவு உற்பத்தி பெருக வேண்டும். உணவு உற்பத்தி உயர உழவுத் தொழில், கைத்தொழில் முதலியன பெருக வேண்டும். கலப்பை பிடிப்பது இழிவா? உழைப்பின்றி வாழ்வது உயர்வா? இதை உணர்ந்து தொழிற்கல்வியில் உற்சாகம்காட்டி உயர முற்பட்டால் நாடும் வீடும் முன்னேறும்.

செல்வி N. சாந்திலா
9 A

---

இராஜாஜியின் உவமைகள்

" விதைநெல் "

மாணவர்கள் அரசியலில் கலந்து கொள்வது பற்றி ராஜாஜியின் அபிப்பிராயம் வருமாறு.

"மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்று சொல்லுவது அவர்கள் எப்பொழுதுமே அரசியலில் கலந்து கொள்ளக்கூடாது என்பது அர்த்தமல்ல. விதை நெல்லை சமைக்கக்கூடாது. விதை விதைத்துப் பின்னர் அறுவடை செய்து அதிலிருந்து வரும் தானியத்தையே சமையலுக்கு உபயோகப் படுத்த வேண்டும். மாணவர்களும் விதையைப் போன்றவர்களே. அவர்கள் நெல்லாகும்வரை காத்திருக்க வேண்டும். நாட்டில் பஞ்சம் ஏற்பட்டால் விதை நெல்லையும் சமைக்க நேரிடலாம். அதைப்போல நாட்டில் தவிர்க்க முடியாத கொந்தளிப்பு ஏற்படும் போது மாணவர்களும் அரசியலில் கலந்து கொள்ளலாம்.

---

## அஞ்சலி செலுத்துகிறோம்

எமது முன்னைநாள் ஆசிரிய திலகங்களான
திரு. N. கிருஷ்ணசாமி
திரு. S. இராசையா
ஆகியோரது
ஆன்மா சாந்தி அடையுமாறு அஞ்சலி செலுத்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My First day at School

After the pongal in January. I was to be put to school. When mother told me of this, joy and sadness come to me by turns. I was only six years old then. I was glad that I was going to have new experience in school. But I was always unhappy to leave my home where I was happy with my brothers, sisters and my parents.

At last the day came. My mother made me bathe, she dressed me in good clothes. She put a vermilion mark on my forehead. My mother and I went to school. School was a very big building. We went into the office to see the principal. My mother told the principal that I was to be admitted to the school.

He called the clerk and asked him to admit me. The clerk noted in a form my name, my place of birth, and my age. He asked my mother to get the certificate of birth at the earliest. He requested the peon to take me to the first standard. My mother also came with me.

Mother and I went to the classroom and I was shocked at the sight of unknown faces. I saw many children like me and there was a lady like my mother. She was a teacher of a class. Fear came to me. I caught my mother's clothes tightly, at the sight of the teacher. Some how I was frightened. But she approached me with a smile and called me to the class. At this I caught my mother's clothes more tightly. The teacher offered me some sweets.

But I would not touch them. My mother was sweeter than the sweets, which the teacher offered. Then she spoke to me kindly and sweetly and somehow made me accept the sweets. She was trying to befriend me. She told me that I could, like other children, learn and play with them. I was taken up by her kindness and entered the classroom. My mother suddenly disappered.

I was left alone to fend for my self. In the evening as the bell rang my mother come to fetch me home.

**S. Sukesini**
*9 F*

*****

Education is the master instrument to change attitudes.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Flying Saucer

The flying saucer is a fast moving object which had been seen by people from various parts. Scientifically advanced countries such as Russia and U. S. A. have denied having manufactured such an object. All scientists in the world are still wondering as to what this most powerfull object is and as to how and where it has been manufactured. When ever the flying saucer appeared the people who saw it described it to be in the shape of a saucer and having bright blue light. It is also believed that these objects had even landed in certain places and when people took notice of and advanced towards it, it had taken off at a high speed at which no man - made object could travel and disappeared into the sky.

It is believed these objects had come to earth from the planet mars. No body still knows who operated these objects and as to whether they were also of human form. It is being keenly awaited by scientists to follow them and investigate this mysterious object and its occupants. Who ever invented the flying saucer is believed to be more advanced than all other scientists on earth.

N. Mathivathani Nalliah
*8 A*

*****

# Marx's free thoughts about Society and Education

Mark discovered that in a class-differentiated society when each individual falls into some class and lives and acts as its other specimens, no significance attaches to a man's personal qualities as he takes up his station in life. In that sense the individual is quite faceless. Under socialism things are quite different. Despite the remaining class and social group distinctions, a man's status does not depend on class origion or social group affiliation, for these cease to hold out privileges as guarantee for superior careers. The individual's status is determined only by his personal qualities, capacities and readiness to work, all of which are given full scope under socialism.

He advocated a new system of education which opens to millions of men truly broad possibilities for combining intellectual and material activity because it paves the way



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

for bridging the gap between the mental and physical labour and the work of theorists and practitioners. It infuses the creative spirit into physical labour and creates the conditions for raising the cultural and technical level of the workers and peasants to that of the intellectu-als. It has played a great part in creating first, a new type of worker by brain who comes from the rank of people and is organically bound up with them and second the condition for raising the cultural and technical level of the workers and peasants to that of the intellectuals. This shows above all the tremendous importance of education and science in forming the free personality.

The other side of this great revolution in education was brought out in our own day. It has turned the means of production into social prope--rty and created a planned economy. Economical and political science can be applied in practice. Markian theory, made this application imperative for not only technology but also economy and politics.

However there was no social science to speak of before marxism carried out its revolution. In the 1880s Marx and Engels laid the foundation of social science, but for a long time its practical use was strictly negative for it served as an instrument in preparing the over throw of the moribund capita-list system.

In socialist society there are no unemployed or starving people. The society of the builders of communism is moving forward to material abundance. Finally the elements of spontaneity in economic development will be completely overcome. In every sphere of production society will have preserves allowing it, through well regulated accounting and control to carry on production in a balanced manner without stoppages.

The degree of equality attained by men in society is the measure of individual freedom. No one can be free by himself. Man is free only in a collective and through his relation--ships with the collective and society. The markist theory of freedom is the free development of each as a condi--tion of the free development of all freedom for the sake of the life and happiness of all; Freedom for the triumph of Equality, Brotherhood, Justice, Reason and Progress. It brings humanity free creative labour and lasting peace and is the condition of such genuine freedom.

**Niranjan Yogasundaram**
*12 B*

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Rainy day

In Jaffna November is usually a very wet month but this morning was unusually bright and sunny, not a single cloud was seen across the sky. As I was getting ready to go to school suddenly the sky became dark. It was strange, so many rain clouds had gathered in such a short time.

My mother asked me not to go to school, because she said it was going to rain very heavily. She was right, for almost at once it began to rain very heavily and it rained almost the whole of that day. There were bright flashes of lightning followed by peals of loud thunder. It was very frightening indeed. Old people don't like rain because they can't do their daily work but children love a rainy day very much. They enjoy the rain.

Our flower garden in front of our house was flooded. So my sister and I made paper boats and floated them in the water. We had a boat race too. Playing in the garden was a great fun, when mother saw us she sternly ordered us to go in and dry ourselves. She was afraid we would catch a cold. That was the end of our play.

Towards evening the weather became bright gradually and when we thought that the rain had stopped, it began pouring down again. It was already night we had an early dinner and went to bed immediately. The frogs in a neigh-bouring pond began to croak making sleep impossible. But it was so cold we slept so well that it was broad daylight, when we were up the next morning.

Vathsala Duraisingam
8 A

SUCCESS IN LIFE

Greatness is a combination of ability and opportunity. You may have ability; if you do not get the opportunity nothing happens. If you have the opportunity but do not have ability, nothing happens. It is a combination of ability and opportunity that gives you a modest amount of success in life.

*Dr. S. Radhakrishnan*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் கல்லூரிப் பரிசளிப்பு விழா அறிக்கை

திருவாளர் க. துரைசிங்கம் அவர்களே, திருமதி துரைசிங்கம் அவர்களே, இவ்விழாவிற் கலந்து கொள்ளும் பெற்றோர்களே, பழைய மாணவர்களே, அனுதாபிகளே, எங்கள் கல்லூரிக்கு உங்கள் வரவு நல்வரவாகுக.

எங்கள் விழாவிற்குத் தனிநாயகமாக விளங்கும் மாண்புமிகு திரு. க. துரைசிங்கம் அவர்கள் கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தன்னுடைய ஆரம்பக்கல்வியை எங்கள் கல்லூரியிலே பயின்றவர். இப்பொழுது இவர் கட்டிடத்திணைக்களத்தில் உயர் பொறியியல் நிபுணராகத் திகழ்கின்றார். இவர் உயர்கல்விக்காக இங்கிலாந்து சென்று பொறியியல் நிபுணராகத் தேர்ச்சி பெற்றார். பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபம் இப்பெரியாருடைய மேற்பார்வையிலேதான் கட்டிமுடிந்ததென்பதை நாம் பெருமிதத்துடனும், மகிழ்ச்சியுடனும் கூறக் கடப்பாடு உடையோமானோம். இதனால் இப்பெருமகனார் தான் இளமைக்காலத்திற் கல்விபயின்ற எங்கள் கல்லூரிக்கு மட்டுமல்ல, தன் பொன்னாடாம் ஈழத்திருநாட்டிற்கும் பொன்றாப்புகழைத் தேடித்தந்து பீடுநடை போட்டுத்திகழ்கின்ற உத்தமராவார். இவர் எங்கள் கல்லூரிக்குக் கட்டடநிதிக்காக 30,000 ரூபாவை உதவிய வள்ளன்மை மிக்க திருமதி இராஜேந்திரப் பெருமாட்டியின் உற்ற உறவினரும் வைத்தியகலாநிதி S. இராசாவின் மருகருமாவார். சட்டத்துறையிற் புகழ்பெற்ற வண்ணார்பண்ணையை யிருப்பிடமாகக்கொண்ட அப்புக்காத்து கந்தையாவின் மகனுவார். இவ்வளவு தகைமை சார்ந்த பெரியார் இவ்விழாவிற்கு தலைமைதாங்குவதையிட்டு எங்கள் கல்லூரிச் சமுதாயம் பெருமைப்படுகின்றது. இப்பெரியாரும், இவரது பாரியாரும், பிள்ளைகளும் சகலசம்பத்துக்களையும் பெற்று ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி செல்லவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று மாணாக்கர்கள் திருமதி துரைசிங்கம் அவர்களிடமிருந்து பரிசில்கள் பெறுவதை உங்களுக்குக் கிடைத்த ஒரு பெரும் பாக்கியமாகவே கருதவேண்டும். இவர் வைத்திய கலாநிதி S இராசாவின் அருமைப் புதல்வியாவார். கலாநிதி இராசா அவர்கள் எங்கள் கல்லூரிக்குப் பன்முறை உதவி செய்திருக்கின்றார். எங்கள் கல்லூரிவைபவங்களிற் பங்குபற்றியிருக்கின்றார். அவர்கள் எங்கள் கல்லூரியின் வளர்ச்சியில் அயராது உழைத்த உத்தமவராவார். திரு. க துரைசிங்கத்தின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு அவரது வாழ்க்கைத் துணைவியார் பெரிதும் உதவியிருப்பார் என்பதில் சற்றுமையமில்லை.

இன்று எங்கள் பரிசளிப்பு வைபவத்தில் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் கல்லூரி அனுதாபிகள், பெற்றோர்கள் பலரும் வருகை தந்திருப்பதையிட்டு நாமெல்லோரும் பெருமகிழ்ச்சியடைகின்றோம். எங்கள் கல்லூரியின் எதிர்கால முன்னேற்றத்திற்கு அவர்களெல்லோரும் அயராது உழைப்பார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

### கல்வி உலகில் மாற்றங்கள்

பல்லாண்டுகளாக நிலவிவந்த க. பொ. த. (சா) வகுப்புக்கள் இவ்வாண்டுத் தொடக்கத்தோடு பாடசாலைகளில் முடிவுக்கு வந்துவிட்டன. ' பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினுனே'' என்று நன்னூலில் பவணந்தி முனிவர் கூற்றுக்கிணங்க N. C. G. E., H. N. C. E. வகுப்புக்கள் நடைபெறுகின்றன. G. C. E. (A/L) வகுப்புக்கள் இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குப் பாடசாலைகளில் நடைபெறலாம். 1980-ம் ஆண்டளவிற் பாடசாலைகளிற் புதிய கல்வித் திட்டம் முழுமையாக செயற்படுத்தப் படலாம். முதன்முறையாக H. N. C • E. இறுதியாண்டு மாணவர்கள் 1978-ம் ஆண்டுபரீட்சைக்கு ஏப்பிரல் மாதம் தோற்றுவார்கள். அப்பொழுது இம்மாணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் சராசரி வயது பதினாறுயிருக்கும். முன்பு பல்கலைக் கழகங்களிற் புகுவதற்கு ஆகக்குறைந்த வயது பதினேழாகவிருந்தது. கல்வி வட்டாரங்களில் நிலவுகின்ற தகவல்களின்படி ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளிலும் தேர்ந்தடுக்கப்பட்ட பாடசாலைகளிற் பல்கலைக் கழகங்களிற் சேர்வதற்குத் தகுதியுடைய மாணவர்கள் ஓராண்டுக் காலம் தாங்கள் தெரிந்தெடுக்கும் துறைகளிற் கற்கவேண்டும்.

இக்காலத்தில் மாணவர்கள் தங்கள் பாடங்களில் ஆழ்ந்த அறிவைப்பெற முடியும். அதற்குப் பின்பு அவர்கள் பல்கலைக் கழகங்களிற் படிப்பதற்குத் தகுந்த ஆற்றலைப் பெற்றிருப்பார்கள். இம்முறை கல்விமான்களால் வரவேற்கத்தக்கதேயாம். ஆனால் பல்கலைக் கழகங்களுக்கு நூற்றுக்குப் பத்துவீத மாணவர்களே அனுமதிக்கப்படுவர் என்று நம்பப்படுகின்றது. எஞ்சிய மாணவர்களின் கதியென்னவென்று பெற்றோர்கள் வினவலாம். அரசாங்கம் இந்நிலையை நிவர்த்தி செய்வதற்கேற்ற நடவடிக்கைகளை யெடுக்க வேண்டும். தொழில்நுட்பக் கல்லூரிகளிற் சில மாணவர்கள் சேர்ந்து கல்வி தொடர்ந்து பயிலலாம். பெரும்பாலான மாணவர்களினுடைய நிலை தெளிவாகவில்லை. அரசாங்கம் இந்நிலையை நிவர்த்திசெய்ய ஆவன செய்ய வேண்டும். படித்தவர்களிடையே வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்துக்கொண்டே வருகின்றது. மாணுக்கர்கள் அரசாங்கத்திலே எழுதுவினைஞர்கள் வேலைகளை நம்பியிராமல் நாட்டின் பொருளாதாரத்தை வளம்படுத்தும் முறையில் தொழில்களில் ஈடுபடும்படி ஊக்குவிக்கப்பட வேண்டும். "கோழிமேய்த்தாலும் கோரணமேந்திலே மேய்க்க வேண்டும்" என்ற குடியேற்ற நாட்டுக் கால மனப்பான்மை முற்றாக நீங்கவேண்டும். புதிய கல்வித்திட்டம் இந்நிலையை மாற்றுமென்று நம்பப்படுகின்றது. இம்முறை N. C. G. E. பரீட்சையிற் சித்தியடைந்த மாணவர்கள் விஞ்ஞானத்துறையையும் வர்த்தகத்துறையையுந்தான் தேர்ந்து எடுத்திருக்கிறார்கள். சமூகக் கல்வித்துறை, மனிதப் பண்பாட்டியல், அழகுக் கலை, மனையியல், விவசாயத் துறை முதலியவற்றை விரும்பிப்படிக்க முன்வரவில்லை. இது விரும்பத்தக்கதல்ல. மாணுக்கர்கள் பாடத்துறைகளைத் தேர்ந்தெடுப்பதை - அவர்கள் அப்பாடத்துறைகளுக்குத் தகுதியுடையவராயிருப்பின், அவர்கள் பெற்றோரிடம் இதனை முறையிட்டுள்ளோம். காலகதியில் மற்றத் துறைகளிலும் மாணவர்கள் விரும்பிப் படிப்பாரென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சென்ற ஆண்டு தொடக்கம் எங்கள் பிரதம பாடசாலை வடமாநிலக் கல்வி அதிபதியின் கட்டளைப்படி தனித்தியங்குவதைப் பலருமறிவார்கள். எங்கள் பாடசாலையில் இப்பொழுது 6-ம் தரம் தொடக்கம் H. N. C. E., G. C. E. (A/L) வரைக்கும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. மொத்தமாக 1523 மாணவர்கள் இவ்வகுப்புக்களிற் கல்வி பயில்கின்றார்கள்.

எங்கள் ஆசிரியர் குழாத்தில் 53 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றார்கள். அவர்களில் பதின்மர் விஞ்ஞானப் பட்டதாரிகள், பதினொருவர் கலைப்பட்டதாரிகள் தொழில் முன்னிலைப் பாடங்களான உலோகவேலை, மனையியல் கற்பிப்பதற்காக மூன்று ஆசிரியர்களைக் கல்வித் திணைக்களத்தின் அனுமதியுடன் சலுகைப்பணக் கட்டணத்திலிருந்து கற்பிக்க நியமித்துள்ளோம். சென்ற ஆண்டு எங்கள் மத்தியிற் கடமையாற்றிய பின்வரும் ஆசிரியர்கள் மாற்றலாகிச் சென்றிருக்கின்றார்கள்.

திரு. வி. ஐயாத்துரை
திரு. எஸ். சுந்தரலிங்கம்
திரு. எஸ். செல்வநாயகம்
திருமதி எம். பாலசிங்கம்
திருமதி எல். சுந்தரலிங்கம்

இவர்கள் இக்கல்லூரியிற் கற்பிக்கும் பொழுது கல்லூரியின் நலனைக் கருத்திற் கொண்டு கடமையாற்றியவர்கள். இவர்கள் தங்களின் விருப்பத்தின்படி வேறு பாடசாலைகளுக்கு மாற்றலாகிச் சென்றிருக்கின்றார்கள். இங்கு சில ஆண்டுகளாக ஆசிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையாகக் கடமையாற்றிய திருமதி ஐ. சபாரத்தினம் ஓய்வு பெற்றிருக்கின்றார்.

இவ்வாண்டுத் தொடக்கத்திற் பின்வரும் ஆசிரியர்கள் கடமையேற்றிருக்கிறார்கள்.

திரு எஸ். துரைராசா
திரு. கே. ஸ்ரீகாந்தன்
திருமதி வி. தனபாலசிங்கம்
செல்வி பி. வைத்திலிங்கம்

இவர்கள் வரவு நல்வரவாகுக.

எங்கள் கல்லூரியிற் கடமை புரியும் ஆசிரியர்கள் திரு மு. சிவராசா, திரு. கே. சந்திரமௌலீசன், திருமதி என். குணபாலசிங்கம் ஆகிய மூவரும் கல்வி டிப்புளோமா பரீட்சையிற் சித்தியெய்தி யுள்ளார்கள். அவர்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

## கல்லூரிச் சங்கங்கள்

### சைவ இளைஞர் மன்றம்

கொக்குவில் இந்துவை நிறுவிய பெரியார்களின் நோக்கத்தை ஈடேறச் செய்வதே எமது சைவ மாணவ மன்றத்தின் நோக்கமாகும்.

எமது மன்றத்தினரால் வருடாவருடம் கொண்டாடப்படும் நவராத்திரி விழாவை சென்றவருடமும் பெருவிழாவாகத் கொண்டாடியது இறுதிநாள் நிகழ்ச்சியில் பண்டிதர் இ. திருநாவுக்கரசு அவர்கள் கலந்து கொண்டு நவராத்திரியின் மகிமை பற்றி எடுத்துரைத்தார். இதைத் தொடர்ந்து விசேட கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

தைப்பொங்கல் விழா, தமிழர் விழா. இவ்விழாவினை வழமைபோல் பழையமாணவரும் நாமுமாக சேர்ந்து கல்லூரி முன்றலில் கொண்டாடினோம்.

குடமுழுக்கு நடைபெற்றதை யொட்டி திருக்கேதீஸ்வரத்தில் வருடம் தோறும் நடாத்தி வந்த திருவிழா இம்முறை வைகாசி மாதம் 26ம் நாள் நடைபெற இருப்பதாக அறிகிறோம் இதனை வெகு விமரிசையாக நடாத்த தற்போது திட்டங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

ஆண்களுக்குவேறு பெண்களுக்கு வேறாக தினமும் கல்லூரி ஆரம்பிக்கும் போது தேவார பாராயணத்துடனே ஆரம்பமாகிறது. வெள்ளிக்கிழமை தோறும் விசேட பூசையும் கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெற்று வருகின்றது.

வழமைபோல் சென்ற ஆண்டும் ஏராளமான மாணவர்கள் விவேகானந்த சபையால் நடாத்தப்படும் பரீட்சைகளுக்குத் தோற்றி சித்தியடைந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### உயர்தர மாணவர் மன்றம்

எமது கல்லூரி உயர்தர மாணவர் மன்றம் வழமைபோல் வாராந்தம் கூட்டங்களை நடாத்தி வருகின்றது. இக்கூட்டங்களில் மாணவர்களின் பேச்சுக்களும், விவாதங்களும், பிற பிரமுகர்களின் சிறப்புச் சொற்பொழிவுகளும் நிகழ்கின்றன. மன்றத்தின் வருடாந்த இராப்போசன விருந்து வழமைபோல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்றவருடம் இராப்போசன விருந்திற் பிரதமஅதிதியாக திரு. எம். வி. தியாகராசா நிதிஇயக்குனர் (BrownGroup) அவர்கள் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார். இவ்விழாவில் எமது ஆசிரியர்கள் ஏனைய பாடசாலை அதிபர்கள், மாணவ மன்றப் பிரதிநிதிகள், மற்றும் கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட பல பிரமுகர்கள் கலந்து விழாவைச் சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. இம்மன்ற நடவடிக்கைகளை மேற்பார்வை செய்த ஆசிரியர் திரு. ஆர். மகேந்திரன், திரு. எஸ். செல்வநாயகத்திற்கு எமது பாராட்டுக்கள்.

### ஆசிரியர் கழகம்

எமது ஆசிரியர் கழகம் நல்லமுறையில் நடைபெற்று வருகின்றது. ஆசிரியர்களிடையே ஒற்றுமையும், ஒத்துழைப்பையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்துக் கல்லூரி நிர்வாகத்துக்குக் குழு உதவியாகச் செயற்பட்டு வருகிறது.

ஆசிரியர்களின் சம்பளம் வழங்குதல் அவர்கள் மாதந்தோறும் வெவ்வேறு நிறுவனங்களுக்குக் கட்டவேண்டிய பணத்தைச் சேர்த்து அனுப்புதல் முதலிய வேலைகளை அங்கத்தவர்களின் வசதிக்கேற்ற முறையிற் செய்து வருகின்றது. அங்கத்தவர்களின் அறிவு விருத்தி கருதிப் பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் வருவித்து யாவரும் பயன் பெறும் வகையிற் கழகம் நூல்நிலையத்தை நடாத்துகின்றது புதிதாகக்கல்லூரியிற் கடமையாற்றவரும் ஆசிரியர்களை வரவேற்றும், மாற்றம் பெற்றோ அன்றி சேவையிலிருந்து இளைப்பாறியோ செல்லும் ஆசிரியர்களுக்குப் பிரியாவிடை கூறியும் அவர்களுக்குக் கல்லூரியில் நீங்காத பற்றுண்டாகுமாறு செய்வதில் இக் கழகம் பெரும் பணியாற்றி வருகின்றது. இன்னும் அவசியம் நேரும் போது அங்கத்தவர் சிறுதொகைப் பணத்தைக் கடனுகப் பெறவும். கழகத்தின் மூலம் பணத்தைச் சேமிக்கவும் ஏற்றவழிவகைகளைக் கழகம் மேற்கொண்டு உறுப்பினர்களுக்கு உற்றுழி உதவி உறுதுணை புரிகின்றது.

கழக வேலைகளை ஆண்டுதோறும் தெரிந்தெடுக்கப்படும் நிர்வாகக்குழு செய்து வருகின்றது. வெவ்வேறு பொறுப்புக்களை ஏற்கும் உத்தியோகத்தர் தமக்கேற்படும் தொல்லைகளையும் பொருட்படுத்தாது சேவை நோக்கோடு பணியாற்றி வருகின்றனர்.

கல்லூரியின் முன்னேற்றத்துக்கு ஒன்றுபட்ட முறையில் ஆசிரியர் சேவை புரிதற்குக் கழகம் துணைபுரிகின்றது. கல்லூரியில் நடைபெறும் விசேட நிகழ்ச்சிகளிற் கழகம் பங்குகொண்டு அவை சீராக நடைபெறுதற்கு நிர்வாகத்தோடு ஒத்துழைத்து வருகிறது.

கவின் கலைகள்

1976-ம் ஆண்டு வடமாகாண ஆசிரியர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட சங்கீதப் போட்டியில் எமது கல்லூரி பங்குபற்றி, மேற்பிரிவு தனித்துப்பாடலில் முதலாம் இடத்தையும் கூட்டுப்பாடலில் இரண்டாம் இடத்தையும் பெற்றது.

ஆனிமாதம் நடைபெற்ற சேக்கிழார் விழாவில் மாணவிகள் "திருமுறை ஓதல்" நிகழ்ச்சியிற் பங்கு பற்றியது குறிப்பிடத்தக்கது.

புரட்டாதி மாதம் நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரியால் நடாத்தப்பட்ட கலை விழாவிற் பங்கு பற்றி, கீழ்ப்பிரிவு கூட்டுப் பாடலில் முதலாம் இடத்தைப் பெற்றது.

எமது கல்லூரியின் நடனக் குழுவும் கூட்டுப் பாடற் குழுவும் நல்லூர் வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற நடன, இசைப்போட்டியில் முறையே 1-ம், 2-ம் இடத்தைப்பெற்று வடமாநிலப் பாடசாலைகளுக் இடையேயான போட்டியிற் பங்கு பற்றி அகில இலங்கைப் பாடசாலைப் போட்டியிற் பங்குபற்றத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம.

எமது மாணவ மாணவிகள் கல்லூரியில் நடைபெறும் சகல விழாக்களிலும் குறிப்பாக நவராத்திரி இறுதி நாள் நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி வருவதுடன் வெள்ளிக்கிழமை தோறும் பாடசாலையில் நடைபெறும் கூட்டு வழிபாட்டு நிகழ்ச்சிகளிலும பங்குபற்றிச் சிறப்பித்து வருகிறார்கள்.

இவ்வாண்டு எமது கல்லூரி மாணவிகள் பல நிகழ்ச்சிகளிற் பங்குபற்றிக் கல்லூரியின் புகழை ஓங்கச் செய்துள்ளார்கள்

கனிஷ்ட மாணுக்கர் பயிலுநர் படையினர்

இவ்வருடம் மேற்படி படையினர் பாசறைத்தெரிவு முறையே யாழ்ப்பாணம், கெக்கருவை, பொல்லநறுவை, பதுளை ஆகிய நான்கு நகரங்களில் நடாத்தப்பட்டது. ஒவ்வொரு பாசறையிலும் ஒன்பது பாடசாலைகள் பங்குபற்றின. முதல் நடாத்தப்பட்ட போட்டியில் எமது படையினர் நான்காவது இடத்தைப் பெற்றனர். ஏனைய பாசறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவில் எமது கல்லூரி இருபத்தொன் பதாவது நிலையை வகுத்துள்ளது.

எமது கல்லூரியில் ஆண்டு வகுப்புகள் ஒழுங்கு செய்வதற்குமுன் தே. க. பொ. த., க. பொ. த. [சா] பரீட்சைப் பெறுபேறு கள் வெளிவந்தமையால் மாணுக்கர் ஒழுங் காகப் பயிற்சியிற் பங்கு பற்றவில்லை. தின மும் பன்னிரண்டு மாணவரே பயிற்சியில் ஈடுபட்டனர். மேலும் பத்து மாணவரை மிகப் பிரயாசைப்பட்டுச் சேர்த்து இருபத் திரண்டு பேரை மாத்திரமே பாசறை யிற் பங்குபற்றச் செய்தோம்.

மாணுக்கரதும், பெற்றோரதும் ஒத்து ழைப்பின்றி இப்படை முன்னேற முடியாது.

முப்பத்தாறு பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற தெரிவுப் போட்டியில் முதல் இருபது பாடசாலைகள் மட்டுமே ஏப்பிரல் மாதம் 7-ம் திகதி தொடக்கம் 10-ம் திகதி வரை நீயத்தலாவையில் நடைபெறவிருக் கும் இறுதிப் பாசறையிற் கலந்துகொள்ளும் பாக்கியத்தைப் பெற்றுள்ளன.

வருங்காலத்தில் எமது மாணவர் ஊக் கம் எடுத்தால் நாம் முன்னேறுவதற்கு இட முண்டு.

## நன்றி நவிலல்

இவ்வறிக்கையை முடிக்குமுன் நிர்வா கம் செவ்வனே நடைபெற எனக்கு உதவி யாக இருந்த எல்லோருக்கும் எனது நன்றி யைத் தெரிவிக்க விழைகின்றேன். உப அதி பர் திரு. அ. பஞ்சலிங்கம் அவர்கள் அயராது கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்து வரு கின்றார். அவருக்கு என் மனமார்ந்த நன்றி. ஆசிரியர்களின் ஒத்துழைப்பின்றி நான் எனது பதவிக்குரிய பொறுப்பு வாய்ந்த கட மைகளைத் திருப்தியாகச் செய்திருத்தல் இய லாது. தமது ஓய்வு நேரங்களைப் பாடசாலை வேலைக்காக செலவிடும் ஆசிரியர்களுக்குச் சிறப்பாக நன்றி கூறுகிறேன்.

1977-ம் ஆண்டு மாணவர்களுடைய ஒழுங்குப் பொறுப்பாசிரியர்களாக இருந்த;

திரு. V. கணேஸ்வரன்.
திரு. R. மகேந்திரன்.
திரு. J. வில்வராசா.
திரு. C. பழனித்துரை.
செல்வி. P சிவக்கொழுந்து.
திருமதி S. சுப்பிரமணியம்.

அவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

அலுவலக எழுதுவினைஞரும், ஏனைய கல்லூரி ஊழியர்களும் ஆற்றிய பணிகளுக் காக அவர்களுக்கு நன்றிகூறக் கடப்பாடு டையேன்.

வடபகுதிக் கல்வி அதிகாரி திரு. ஏ. எம். மஜித் அவர்களும், அவருடைய கல்வி அதி காரிகளும் நல்கும் உதவிகளுக்கு நன்றி சிறப் பாக நல்லூரர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். சோமசுந்தரம் அவர்கள் பாடசா லைக்கு விஜயம் தந்து எமக்கு வழிகாட்டுவ தற்காக எமது நன்றி.

நிறைந்த மனத்துடன் எம்மோடு எப் பொழுதும் ஒத்துழைத்து வரும் பெற்றோ ருக்கும், பழைய மாணவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக

பரிசில்கள் வாங்குவதற்கு பணம் வேண் டுமென்று கேட்டவுடன் மனமுவந்து கொடுத்த அன்பர்களுக்கு எமது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இவ்விழாவிற்குப் பெருமையளித்த திரு. கே. துரைசிங்கம் அவர்களுக்கும், திருமதி துரைசிங்கம் அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவிக்கின்றோம். இவ் விழா அவர்களுக்கு நினைக்கும் தோறும் இன் பம் பயக்கும் ஓர் அனுபவமாக அமையு மென நம்புகின்றோம்.

## பெற்றார் ஆசிரியர் சங்கம்

கொக்குவில் இந்துக்கல்லூரிப் பெற்றார் ஆசிரிய சங்கம், தனது பாரம்பரியத்திற் கிணங்க முன்னைநாள் அதிபர் திரு. சி. கே. கந்தசுவாமி அவர்களால் ஆரம்பித்துவைக் கப்பட்ட புதிய மூன்றுமாடிக் கட்டடத்தை 1977 தை மாதத்திற் பூர்த்தியாக்கியது. கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டது என்பது கதையளவில் இலகுவாக இருக்கலாம். ஆனால் எமது சங்கம் பழைய மாணவ சங் கத்தினதும், கல்லூரி நன்மை விரும்பிகளின தும் அயரா உழைப்பினாலும், இக்கட்ட டத்தைக் கட்டிமுடித்தது. இக்கட்டடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் தொகுதி தேசியசபை உறுப்பினரும், அரசியலதிகாரியுமான திரு. சி. அருளம்பலம் அவர்கள் இக்கட்டடத்தைப் பூர்த்தி செய்வதற்கு அரசாங்கப் பணமாக ரூபா 1,45 000 தந்துதவியமைக்கு எமது சங்கமும், கல்லூரிச்சமுதாயமும் என்றென்றும்கடமைப்பட்டிருக்கின்றது என்பதை குறிப்பிட்டால் மிகையாகாது. இவர் தேசியப் பேரவை உறுப்பினராக வந்த காலம் தொடக்கம் இற்றை வரை எமது கல்லூரிக்குச் செய்த பலதரப்பட்ட உதவி கணக்கிடமுடியாது. இந்நிலையில் எமது கல்லூரிக்கு வேண்டிய இடவசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. வேண்டிய திறமைமிக்க ஆசிரியர்கள் பணிபுரிகிறூர்கள். இந்த வசதி வாய்ப்புக்களை கல்லூரியிற் கல்வி பயிலும் மாணவர்கள் தங்களுக்குச் சாதகமாக்கித் தங்கள் கல்வியிற் சிறப்பான சித்தி பெறுவதற்கு முயற்சி எடுக்கவேண்டும். இவர்கள் பெறும் சிறப்புச் சித்தி மூலம் கல்லூரித் தரம் உயரவேண்டும். இதற்கு ஆசிரியர்கள் மட்டும் பொறுப்பாக இருக்க முடியாது. பெற்ரேர் தத்தம் பிள்ளைகளைக் கல்வியில் ஊக்கமளிக்க வேண்டும். இந்தத் தலையாய கடமையைப் பெற்ருர் செய்வார்களேயானல், நிச்சயமாக எங்கள் கல்லூரி மாணவர்கள் சித்தியிற் பெருமை கொள்ள வாய்ப்பு உண்டு. நாம் விரும்பும் இந்த முன்னேற்றம் எமக்குக் கிட்டுவதற்கு ஏற்ற சாதகமான நிலைமை எமது கல்லூரிக்கு இருக்கிறது என்பதைச் சிந்திக்கும் பொழுது நாம் பெருமை அடைகிறேம்.

கட்டடத்திற்கு நிதித்தட்டுப்பாடு ஏற்பட்டபோது உரும்பராயைச்சேர்ந்த திரு. கிருஷ்ணசாமி 10.000 ரூபா அன்பளிப்புச் செய்தார். இவர் 1977 தை மாதத்திற் காலமாகிவிட்டார் இவரது மறைவு அவரது குடும்பத்தினர், உறவினர்களுக்கு மட்டுமல்லாமல், எமது கல்லூரிக்கும் பெரும் இழப்பு என்பதை நாம் குறிப்பிடாமலிருக்க முடியாது. அவரது ஆத்மா சாந்தியடைய நாம் பிரார்த்திக்கும் அதே வேளையில் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்ரேம்.

எங்கள் புதிய மூன்று மாடிக்கட்டடம் ஆரம்பித்த காலம் தொடக்கம் கட்டடம் முடிந்த வரை எமக்குப் பல வகையிலும் உதவி தந்த பெரியோர்களுக்கும், பெற்ருேர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பழையமாணவர்களுக்கும் எமது சங்கம் நன்றி கூறி இனிவரும் காலத்தில் நாம் செய்யவிருக்கும் ஆக்க வேலைகளுக்குத் தொடர்ந்து உதவி புரியும் வண்ணம் கோருகின்ருேம்.

எமது கல்லூரி நிர்வாகம் எமது சங்கம் சுமுகமாக இயங்குவதற்கு ஆற்றிய உதவிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறது.

எமது சங்கம் மேலும் பல பணிகளைத் தொடர்ந்து செய்து வெற்றி பெற நாம் எல்லோரும் ஒத்துழைப்போமாக.

## பழையமாணவர் சங்கம்

கொக்குவில் இந்துக்கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் கல்லூரியின் வளர்ச்சியிற் கண்ணும் கருத்துமாயிருந்து உதவிபுரிந்து வருகின்றது. பழையமாணவர் சங்கக் கொழும்புக்கிளை பாடசாலை முன்னேற்றத்திற்கு ஆவன செய்து வருகின்றது. நாங்கள் எங்கள் வைபவங்களுக்குப் பழையமாணவர்களையே பிரதமவிருந்தினர்களாக அழைத்துக் கௌரவிக்கின்ருேம். பழைய மாணவர்கள் வருடாவருடம் விளையாட்டுப் போட்டிகளின் போது உதவி புரிவதுடன் கல்லூரியின் சகல வைபவங்களுக்கும் சமுகமளித்து உற்சாகப்படுத்தி வருகின்ருர்கள். இவர்கள் எல்லோருக்கும் எமது நன்றி.

மாணவ தலைவர்களும், சாரணர்களும் வழிகாட்டிகளும் செய்து வரும் பணிகளுக்காக அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்ருேம்.

எமது அழைப்புக்கு மதிப்புக் கொடுத்து இங்கே வந்து விழாவைச் சிறப்பித்த சபையோர் அனைவருக்கும் நன்றி கூறுகின்ருேம்.

வணக்கம்

மா. மகாதேவன்
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசு பெறும் மாணவர்கள் 1976

## 6-ம் தரம்

பொதுத்தகைமை 1-ம் பரிசு

கோ. ஸ்ரீசங்கர் 6 A

,, 2-ம் பரிசு தே. சித்ரா 6 A

சமயம். கோ. ஸ்ரீசங்கர் 6 A

தமிழ். தே. சித்ரா 6 A

ஆங்கிலம். சி. ஜெகராஜன் 6 A

கணிதம். அ. அருள்நிதி 6 A

விஞ்ஞானம் சி. துஷ்யந்தன் 6 A

சமூகக்கல்வி கோ ஸ்ரீசங்கர் 6 A

க்ஷேத்திரகணித பொ. வரைதல் கோ ஸ்ரீசங்கர்

சித்திரம். சு. ஜெயானந்தன் 6 D

நடனம். ச. குகனேஸ்வரி 6 B

சங்கீதம். இ. சோபனா 6 B

மின்சாரம், சைக்கிள் வேலை ப. நிரஞ்சன் 6 A

றேடியோ. ப. நிரஞ்சன் 6 A

மனையியல். சு. ஞானசோதி 6 C

தையல். அ. அருள்நிதி 6 A

இயற்கைவளம் ச. இராஜசூரியர் 6 A

,, த. கிருஷ்ணகுமார் 6 A

,, த பாஸ்கரன் 6 A

சுகாதாரம் அ. ரவிகரன் 6 D

வர்த்தகம் இ. பாலேந்திரன் 6 D

உலோகவேலை அ. ரவிகரன் 6 D

கடதாசிவேலை க. சயானந்தன் 6 D

## 7-ம் தரம்

பொதுத்தகைமை 1-ம் பரிசு

இ. சந்திரகாந்தி 7 A

,, 2-ம் பரிசு ச. சுகிர்த்தா 7 A

சமயம் வ. தர்மினி 7 B,

தமிழ் இ. சந்திரகாந்தி 7 B.

ஆங்கிலம் ம. சுதர்சன் 7 F,

கணிதம் இ. சந்திரகாந்தி 7 A,

விஞ்ஞானம் ,, 7 A.

சமூகக்கல்வி கா. சிவயோகநாதன் 7 A.

,, க. சுபேந்திரன் 7 A.

சங்கீதம் அ. கலைவாணி 7 A.

சித்திரம் சு. மணிவண்ணன் 7 A.

சுகாதாரமும், உடற்கல்வியும் இ. சந்திரகாந்தி 7 A.

வர்த்தகம் சு. குலேந்திரன் 7 A,

இயற்கைவளம் க. சுபேந்திரன் 7 A.

மனையியல் சு. சுகிர்தா 7 A,

க்ஷேத்திரகணித பொறி முறைவரைதல்

த. தர்மசீலன் 7 A,

மின்சாரம் ம. சுதர்சன் 7 F,

நறுமணம் சி. தர்மினி 7 B,

## 8-ம் தரம்

பொதுத்தகைமை 1-ம் பரிசு

சி. சிவரூபன் 8 E,

,, 2-ம் பரிசு சி. உதயகுமாரி 8 A,

சமயம் சி. ஸ்ரீநாகபூஷணி 8 A,

தமிழ் சி. சிவரூபன் 8 F,

ஆங்கிலம் தி. ஜானகி 8 A,

கணிதம் க. கருணாகரன் 8 E,

விஞ்ஞானம் சி. சிவரூபன் 8 E.

சுகாதாரம் ப. சகிதரன் 8 C.

சமூகக்கல்வி இ. இராஜவர்மன் 8 E.

இயற்கைவளம் சி. ஸ்ரீநாகபூஷணி 8 A.

,, இ. பத்மினி 8 A.

க்ஷே க. பொ வரைதல் சி. உதயகுமாரி 8 A,

வர்த்தகம் ப. இராஜேஸ்வரி 8 A.

மனையியல் சி. உதயகுமாரி 8 A.

நடனம் சி. உதயகுமாரி 8 A.

சங்கீதம் நி. ஜெயந்தி 8 A.

வரைதல் செ. லோகராஜ் 8 D,

விவசாயம் அ. தயாபரன் 8 D,

மின்சார, சைக்கிள்வேலை க கருணாகரன் 8 E,

## தே. க. பொ. த. சாதாரணதரம்

விசேடசித்தி பெற்றோர்.

S. தேவசிகாமணி தமிழ், ஆங்கிலம், கணிதம் விஞ்ஞானம், சமூகக்கல்வி தொ.மு I-II 7

C. பாஸ்கரன் கணிதம், சமயம் 2

S. ஹரிமனோகரன் P VI - P VII 2

M. ஜெயபாலதேவன் தமிழ், கணிதம், விஞ்ஞானம், சமயம், சமூகக்கல்வி P VI-P VII 7

G. மனோறஞ்சன் கணிதம், விஞ்ஞானம் 2

N. நந்தகுமார் கணிதம், விஞ்ஞானம் 2

N. பகீரதன் கவின்கலை (வரைதல்) கணிதம், விஞ்ஞானம், சமயம் P VII 5

S. திருக்குமார் கணிதம் P VII 2

V. திவாகரசர்மா விஞ்ஞானம், சமூகக்கல்வி 2

V. திவாகரன் சமூகக்கல்வி P VII 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T. உதயகுமார் கணிதம், விஞ்ஞானம் 2
K. சாந்தசொரூபன் தமிழ், கணிதம், விஞ். PV I, PV II 5
M. தாரிணி கணிதம், சுகாதாரம், உடற்கல்வி PV II 3
K. கௌரிமனோகரி சங்கீதம், கணிதம் 2
M. கோமதி விஞ்ஞானம் PV II 2
R. கிருஷ்ணதேவி ,, , கணிதம் 2
S. நித்திலா தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், PV I, PV II சமூகக்கல்வி, சுகாதாரம், உடற்கல்வி, சமயம் 9
C. சிவகருணா ,, ,, 2
R. உஷா, சுகாதாரமும் உடற்கல்வியும், நடனம் 2
T. வசந்தகுமாரி கணிதம், சங்கீதம் 2
A. யோகமாலா கணிதம், சுகாதாரமும், உடற்கல்வியும், PV II 3
V. ஸ்ரீதேவி கணிதம், விஞ்ஞானம் PV I PV II 4
S. ஞானகுமாரன் கணிதம், விஞ்ஞானம் 2
K. கனகவாசன் கணிதம், விஞ்ஞானம், விவசாயம் 3
ப. நாகயசோதாதேவி கணிதம், மனையியல் 2
K. கலாதரன் கணிதம் PV II 2
N. ரவிகரன் ,, PV II 2
M. சிவநேசன் கணிதம், விஞ்ஞானம், தமிழ் 3

## பல்கலைக் கழக அனுமதி பெற்றோர்

N. மகேந்திரராஜா — விஞ்ஞானம்
K. நாமகள்தேவி — கலை
A. இரவீந்திரநாதன் — வர்த்தகம்

******

## பரிசளிப்பு விழாவிற்கு நிதி வழங்கியோர்

| பெயர் | ரூபா.ச. | பெயர் | ரூபா.ச. |
|---|---|---|---|
| 1. திரு. க. சிவாநந்தன் | 30-00 | 21. ,, தி. புவனசுந்தரராசா | 15-00 |
| 2. டாக்டர் S. இராஜா | 20-00 | 22. ,, செ. அருமைநாயகம் | ,, |
| 3. திரு. C. K. கந்தசாமி | 20-00 | 23 ,, K. M. முரளீதரன் | ,, |
| 4. திரு. சு. இரத்தினசிங்கம் | 15-00 | 24. ,, மா. குலசேகரம் | ,, |
| 5. திரு. வ. கணேசலிங்கம் | 15-00 | 25. ,, மு. சிவராசா | ,, |
| 6. ,, செ இராஜேந்திரன் | 30-00 | 26. ,, S. கந்தையா | ,, |
| 7. ,, R. R சவுந்திரலிங்கம் | 15-00 | 27. ,, C. சிவசோதி | ,, |
| 8. ,, P. தம்பி | 15-00 | 28. ,, செ. நாகராசா | ,, |
| 9. ,, S. நாகலிங்கம் | 15-00 | 29. ,, A. மார்க் | ,, |
| 10. ,, S. கோபாலசிங்கம் | 15-00 | 30. ,, க. சந்திரமௌலீஸ்வரன் | ,, |
| 11. ,, V. P. S. முத்துக்குமாரசாமி | 15-00 | 31. ,, த வில்வராசா | ,, |
| 12. ,, தி ஈஸ்வரன் கோபரேசன் | 15-00 | 32. ,, K. பேரம்பலம் | ,, |
| 13. ,, S. S. இரத்தினசபாபதி | 15-00 | 33. ,, T. செல்வராசா | ,, |
| 14. ,, R. பாலசுப்பிரமணியம் | 15-00 | 34. ,, சு. காசிநாதன் | ,, |
| 15. ,, ஆ. அப்புத்துரை | 15-00 | 35. ,, T. பாலசுப்பிரமணியம் | ,, |
| 16. ,, மா. மகாதேவா | 15-00 | 36. ,, பொ. சபாரத்தினம் | ,, |
| 17. ,, அ. பஞ்சலிங்கம் | ,, | 37. ,, S. அமரகோன் | ,, |
| 18. ,, க. மயில்வாகனம் | ,, | 38. ,, K. வயித்தியநாதர் | ,, |
| 19. ,, இ. மகேந்திரன் | ,, | 39. ,, சிறிகாந்தன் | ,, |
| 20. ,, வே. கணேஸ்வரன் | ,, | 40. திரு திருமதி. பாலயோகம் | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பெயர் | ரூபா. ச. |
| --- | --- |
| 41. திருமதி. R. திருநாவுக்கரசு | 15-00 |
| 42. ,, G. பஞ்சலிங்கம் | ,, |
| 43. ,, R. சதாசிவம் | ,, |
| 44. ,, I. சண்முகலிங்கம் | ,, |
| 45. ,, M. சிவஞானம் | ,, |
| 46. ,, B. கந்தப்பிள்ளை | ,, |
| 47. ,, S உமாமகேஸ்வரன் | ,, |
| 48. ,, T விவேகானந்தராசா | ,, |
| 49. ,, V. தனபாலசிங்கம் | ,, |
| 50. ,, R. சுப்பிரமணியம் | ,, |
| 51. ,, S. நடராசா | ,, |
| 52. ,, G. மணிவாசகம் | ,, |
| 53. ,, சு. சுப்பிரமணியம் | ,, |
| 54. ,, சு. இராமநாதன் | ,, |
| 55. ,, T செல்வகுருநாதன் | ,, |
| 56. ,, K. சந்திரவர் | ,, |
| 57. ,, R. அழகரத்தினம் | ,, |
| 58. செல்வி J. இராஜதுரை | ,, |
| 59. செல்வி S. சுப்பிரமணியம் | ,, |
| 60. ,, P. சிவக்கொழுந்து | ,, |
| 61. ,, உ. கந்தையா | ,, |
| 62. திரு. சி. அப்பையா | ,, |

| பெயர் | ரூபா. ச. |
| --- | --- |
| 63. திருமதி ச. கணேஸ்வரன் | 15-00 |
| 64. திரு C. இரரசலிங்கம் | ,, |
| 65. S. சின்னத்தம்பி | 45-00 |
| 66. செட்டியார் அச்சகம் | 100-00 |
| 67. S. பிறேம்குமார் | 15-00 |
| 68. இரத்தினம் சபாரத்தினம் } பாமா ஹாட்வெயர் ஸ்ரோஸ், யாழ்ப்பாணம். இரத்தினம் சிவலிங்கம் } | 30-00 |
| 69. க. குணராசா | 30-00 |
| 70. க. செல்லத்துரை | 15-00 |
| 71. வே. தம் ஐயா | ,, |
| 72. N. குணபாலசிங்கம் | ,, |
| 73. செல்வி உ. கந்தையா | ,, |
| 74. செல்வி P. வைத்திலிங்கம் | ,, |
| 75. செல்வி P. சிவக்கொழுந்து | ,, |
| 76. செல்வி நா. வேலுப்பிள்ளை | ,, |
| 77. திருமதி S சுப்பிரமணியம் | ,, |
| 78. திரு. அ. கணபதிப்பிள்ளை | ,, |
| 79. திரு. S. M. ஆறுமுகம் | ,, |
| 80. திரு. க. தர்மலிங்கம் | ,, |
| 81. திரு. சி. துரைராசா | ,, |
| 82. திரு. T. சோமசுந்தரம் | 25-00 |

**கல்வி**

நீரானது நல்ல உணவுப் பொருளை உண்டாக்கிக்கொடுத்து அவற்றை உண்ணும்போது தானும் உணவாவது போலக் கல்வியானது மக்களுக்கு வாழும் வகையைக் கற்பித்து, அன்றாட வாழ்க்கையில் இன்றியமையாத ஒரு கூறுகத் தானும் உதவுகிறது.

249955



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைப் பெறுபேறுகள் — 1976

## I. க. பொ. த. (உயர்தரம்): G. C. E. (A/L)

| | | |
|---|---|---|
| 4 பாடங்களில் சித்தியடைந்துள்ளோர்: | விஞ்ஞானம் | — 4 |
| | வர்த்தகம் | — 11 |
| | கலை | — 13 |
| 3 பாடங்களில் சித்தியடைந்துள்ளோர்: | விஞ்ஞானம் | — 15 |
| | வர்த்தகம் | -- 10 |
| | கலை | — 5 |
| சர்வகலாசாலை வளாகங்களுக்கு அநுமதிக்கப்பட்டோர்: | விஞ்ஞானம் | — 1 |
| | வர்த்தகம் | — 1 |
| | கலை | — 1 |

## II. க. பொ. த. ப. (சாதாரணம்): G. C. E. (O/L) 1976

| | | |
|---|---|---|
| 6 பாடங்களிலும் அதற்குக் கூடுதலான பாடங்களிலும் சித்தியடைந்துள்ளோர் | தொகை | — 73 |
| 5 பாடங்களிற் சித்தி அடைந்துள்ளோர் எண்ணிக்கை | | — 25 |
| க. பொ. த. ப. (உயர்தர) வகுப்புக்களில் அனுமதிக்கப் படத் தகுதிகளைப் பெற்றோர் எண்ணிக்கை | விஞ்ஞானம் | — 39 |
| | கலை | — 07 |

## III தே. பொ. க. த. (N. C. G. E.) 1976

| | | |
|---|---|---|
| *H. N. C. E.* வகுப்புக்களில் அனுமதி பெறுவதற்குத் தகுதிகளைப் பெற்றவர்கள் | விஞ்ஞானம் | — 136 |
| | வர்த்தகம் | — 20 |

IV, 1975-ல் நடைபெற்ற *N. C. G. E.* பரீட்சைப் பெறுபேறுகளின்படி பின்வரும் மாணவர்கட்கு அரசு புலமைப் பரிசில் வழங்கியுள்ளது. 1, S. சுதாகர்

2, K. வசந்தா

3, K. அகிலா

4, R. இரத்தினசோதி.

இவர்கட்கு எமது வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Space Donated*

*By*

★

# COLOMBO STUDIO

164 STANLEY ROAD

T'Phone: 410 JAFFNA



விஜயம் செய்யுங்கள்

உங்கள் கட்டிடத் தேவைகளுக்குரிய

இரும்பு மற்றும் பொருட்களுக்கு

★ ★ ★

# இந்திரா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

131, ஸ்ரான்லி ரோட்,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7250



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For Anything in Photography:

# SELLAMS

## PHOTOGRAPHERS

94 — 96. KASTHURIAR ROAD, JAFFNA.

*Phone:* 436

தொலைபேசி: 569

# ஸ்ரீ லங்கா புத்தகசாலை

*243,* கே. கே. எஸ். ரோட், — யாழ்ப்பாணம்.

எமது புதிய வெளியீடுகள்

1. இந்து சமய பாடம்
   க. சொக்கலிங்கம் (சொக்கன்) B. A.
2. N. C. G. E தமிழ்மொழிப் பயிற்சிகள் பகுதி I, II
   மாதிரி விடைகள் விளக்கக் குறிப்புகள் அடங்கியது
3. N. C. G. E. கணிதம் I, II
   மாதிரி வினாக்களும் விடைகளும் — திருமதி S. இராசநாயகம், B. A.
4. சமூகக் கல்வி - 6வது, 7வது, 8வது
   வினாவிடை பகுதி I, II — கலைமகள் சிவராசா B. A.
5. கருநாடக சங்கீதம் (அறிமுறை) 6-ம், 7-ம் வகுப்புக்கு
6. 5-ம் புலமைப் பரிசிற் பரீட்சை
   பொது உளச் சார்பு — திருமதி S. இராஜநாயகம் B. A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Donated by*

# BAMA HARDWARES

GENERAL HARDWARE MERCHANTS

**11/3, Stanley Road, Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது
**விற்பனையாகின்றது.**

## புதிய பதிப்பு 1977

சுற்றாடற் கல்விப்
புதிய பாடத்திட்டத்திற்கு அமைய எழுதப்பட்ட

| | | |
|---|---|---|
| மாணவர் சூழல் வாசகம் | 2-ம் வகுப்பு | ரூ. 3.50 |
| மாணவர் சூழல் வாசகம் | 3-ம் வகுப்பு | ரூ. 4.75 |
| மாணவர் சூழல் வாசகம் | 4-ம் வகுப்பு | ரூ 5.50 |
| மாணவர் சூழல் வாசகம் | 5-ம் வகுப்பு | அச்சில் |

**ஆக்கம்:** க. சி. குலரத்தினம் அவர்கள்

H. N. C. E. வகுப்புக்குரிய
பொருளியல் இலக்கணம் — ரூ. 13.50
**ஆக்கம்:** அ. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள்

N. C. G. E. வகுப்புக்குரிய
புதிய இந்துசமய பாடத் திரட்டு — ரூ. 10.50
**ஆக்கம்:** க. சி. குலரத்தினம் அவர்கள்

வெளியீடு: **ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை** 235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

---

உங்கள் தேவை — எங்கள் சேவை

சகல பாத அணி தேவைகட்கும் **நாதன்'ஸ்**
★ பாட்டா ★ சின்வா ★ எலஸ்ரோ ★ டி. எஸ். ஐ.
மற்றும் பாதணிகளும் நியாயமான விலையிற் கிடைக்கும்.

★ அழகுசாதனப் பொருட்கள் ★ தையல் உபகரணங்கள்
★ விளையாட்டுப் பொருட்கள் அனைத்துக்கும்

**நாதன்'ஸ்** நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7540

*For Footwear and Fancy Goods*

# Nathan's

MODEL MARKET, JAFFNA. *phone: 7540*



செட்டியார் அச்சகம், 432, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



249955

University of Jaffna
249955
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருந்துகிறேம்

★ சஞ்சிகையிலே இடமின்மையால் தரப்பட்ட விடயங்களிற் பல தவிர்க்கப்பட்டுவிட்டனவே என்பதற்காக... வருந்துகிறேம்

## வேண்டுகிறேம்

★ கல்லூரிச் சஞ்சிகையைப்பெற்று நம்மை ஊக்குவிக்கும்படி பெற்றேரையும், பழைய மாணவரையும், நலன் விரும்பிகளையும்... வேண்டுகிறேம்

★ பழைய மாணவர் தத்தமது பதவி உயர்வுகள், பெற்ற பெறுபேறுகள், புரிந்த சாதனைகள், முகவரி மாற்றங்கள் ஆகியனபற்றித் தந்துதவுமாறு... வேண்டுகிறேம்

# நன்றி..............................

★ ஞாபகார்த்தக் கட்டுரைகள் வழங்கிய திரு. எஸ். இரத்தினபிரகாசம், திரு. எஸ். சிவநாயகம், திரு. த. செ. நடராசா ஆகியோருக்கு... நன்றி

★ அறிவுரையும் உதவியும் வழங்கிய அதிபர், உப அதிபர், ஆசிரியர் யாவருக்கும்... நன்றி

★ குறுகிய காலத்தில் இச் சஞ்சிகையை வெளியிட உதவிய செட்டியார் அச்சகத்தாருக்கு... நன்றி

★ எம்மை மறவாது தமது சஞ்சிகைகளை அனுப்பிய சகல கல்லூரிகளுக்கும்... நன்றி

★ விளம்பரம் தந்த நிறுவனங்கள் அனைத்திற்கும்... நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org